பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 19 வியாழக்கிழமை 04.01.2024 கதிர் 419

# வடக்குக்கு இன்று வருகிறார் ரணில்

## 4 தினங்கள் தங்கியிருப்பார்

வடக்குமாகாணத்திற்குநான்கு நாள் பயணமாக இன்று வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தொடர் சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார்.

இன்று பிற்பகல் யாழ்ப்பாணத்தை வந்தடையும் ஜனாதிபதி 3 மணி முதல் 5.30 வரை யாழ் மாவட்டச் செயலகத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்குகொள்கின்றார். மாலை 7 மணி முதல் 9.30 வரை தனியார்விடுதியில்சிவில்சமூகப் பிரதிநிதிகளைச் சந்திக்கின்றார்.

5ஆம் திகதி காலையில் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் என்கிற நிலையில் சிக்கிக்கொண்டுள்ளது கொழும்பு. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அக்கப்போரில் கொழும்பின் பரிதாப நிலை இதுதான்.

சீன ஆய்வுக் கப்பல்கள் (இதனை இந்தியா உளவுக்கப்பல்கள்என்கிறது) இலங்கைக்கு வந்து செல்வதற்கு கொழும்பு அனுமதி வழங்கி வந்தது. இந்தியா, அமெரிக்காவின் கண்டனங்களையும் தாண்டி கடந்த வருடத்தில் இரு தடவைகள் இப்படி சீனக் கப்பல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

முதல் தடவை எதிர்ப்பையும் மீறி சீனக் கப்பல் திட்டமிட்டபடி ☞ 2

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை கடற்பரப்பில் டிசெம்பர் 10 காரைக்கால் பகுதியை சேர்ந்த 25 மீனவர்கள் 2 படகுகளுடன் கைது ☞ 10

## ஜனாதிபதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு தடைகளை விதிக்க நீதிமன்றம் மறுப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் யாழ்ப்பாணம் வரும் போது எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பில் 8 பேருக்கு எதிராக தடை விதிக்கக்கோரி யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை யாழ்ப்பாண நீதிவான் மன்றம் நேற்று நிராகரித்தது.

சட்டத்தை மீறாத வகையில், ஜனநாயக ரீதியில் எதிர்ப்பில் ஈடுபடுவதற்கான உரிமை எல்லோருக்கும் உள்ளதாக நீதிமன்றம் அறிவித்தது.

ஜனாதிபதி நான்கு நாள் பயணமாக வடக்குக்கு வரும் நிலையில், அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களை முன்னெடுக்கத் தடைவிதிக்கக்கோரியே யாழ்ப்பாணம் நீதிவான் மன்றத்தில் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை பிறப்பித்திருந்த உத்தரவிற்கு அமைய, வழக்கின் 8 ஆவது பிரதிவாதியான தவத்திரு வேலன் சுவாமிகள் நீதிமன்றத்தில் இன்று ஆஜராகி தமது நிலைப்பாட்டினை ☞ 11

## மக்கள் மீதான சுமை 75 சதவீதம் 3 மாதங்களில் குறைக்கப்படுமாம்

2024ஆம் ஆண்டை சாதகமான பொருளாதார வேகத்துடன் ஆரம்பிப்பதன் காரணமாக இந்த வருடத்தின் முதல் காலாண்டு இறுதிக்குள் மக்கள் மீதான சுமை 75 சதவீதம் குறைக்கப்படும் என்று வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நலின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் நலின் பெர்ணான்டோ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2024 ஆம் ஆண்டை பொருளாதார வேகத்துடன் ஆரம்பிக்கின்றோம். இந்த ஆண்டின் முதல் காலாண்டு இறுதிக்குள் மக்கள் மீதான சுமை 75% குறைக்கப்படும் என்பதைக் குறிப்பிட வேண்டும். தற்போதுள்ள வரிக் கொள்கையால், எதிர்காலத்தில் பல சலுகைகள் கிடைக்கும் என உறுதி செய்ய முடியும்.

வரி விதிப்பு தவறு என்று ☞ 8

## மின்சார சபையின் வாயிலை மறித்து ஊழியர்கள் முற்றுகைப் போராட்டம்

### உத்தேச சட்டமூலத்தை மீளப்பெற வலியுறுத்தி

உத்தேச மின்சார சபைச் சட்டமூலத்தினை மீளப்பெறுமாறு வலியுறுத்தி ஒன்றிணைந்த தொழிற்சங்கங்கள் நேற்று இலங்கை மின்சாரசபை பிரதான வாயிலை முற்றுகையிட்டு போராட்டத்தினை நடத்தியது.

உத்தேச மின்சார சபைச் சட்டமூலத்திற்கு எதிராக மூன்று நாள் எதிர்ப்புக் காலமாக அறிவித்துள்ள ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தினர் கொழும்பு கோட்டையில் உள்ள இலங்கை மின்சார சபையின் பிரதான அலுவலகத்திற்கு முன்பாக ஒன்று திரண்டனர்.

அவ்வாறு திரண்டவர்கள், உத்தேச மின்சார சபைச் சட்டமூலத்தினை நடைமுறைப்படுத்தினால் இலங்கை மின்சார சபையைப் பகுதிகளாக பிரித்து விற்பனை செய்யும் நிலைமைகள் ஏற்படுமென ☞ 2

## ஜனவரி 9 முதல் 12 வரை கூடுகிறது நாடாளுமன்றம்

நாடாளுமன்றம் ஜனவரி 9 முதல் 12 வரை மீண்டும் கூடவிருப்பதாகப் நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

டிசெம்பர் 12 சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய 2024 ஜனவரி 9 மு.ப 09.30 முதல் மு.ப 10.30 வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 05.00 மணிவரை ☞ 10

## மின்சார சபை ஊழியர்களுக்கு சமூக ஊடகத் தடை விதிப்பு

இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு சமூக ஊடகத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் பதில் பொது முகாமையாளரின் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில், டிசெம்பர் 19 முதல் சமூக ஊடகத்தடை விதிக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடைக்கு அமைவாக எந்தவொரு ஊழியரும் சமூக ஊடகங்களில் தமது உத்தியோகபூர்வமான தகவல்களைப் பயன்படுத்த முடியாது.

இலங்கை மின்சார சபையின் தகவல்களை வெளிப்படுத்துவதும், அரசியலுடன் தொடர்புடைய விடயங்கள், பாலியல் மற்றும் இரகசிய விடங்களை சமூக ஊடகங்களில் ☞ 8

## குழந்தைகளுக்கு ஜன. 6 முதல் சின்னம்மைத் தடுப்பூசி ஏற்றல்

தெரிவு செய்யப்பட்ட 9 மாவட்டங்களில் 6 முதல் 9 மாதங்களுக்கு இடைப்பட்ட குழந்தைகளுக்கு சின்னமுத்து தடுப்பூசி மேலதிக டோஸ் ஒன்றை வழங்கும் தேசிய வேலைத்திட்டம் ஜனவரி 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவின் பிரதம தொற்றுநோய் நிபுணர் சமித்த கினிகே தெரிவித்தார்.

சுகாதாரமேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐரோப்பிய மற்றும் தெற்காசிய நாடுகள் உள்ளிட்ட உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் தற்போது சின்னமுத்து தொற்றுநோய் உலகளாவிய ரீதியாக பரவி வருகிறது.

கொரோனா ☞ 11

## பொருளாதார மீட்சிக்கான மாற்று திட்டம் தயாராகிறது

### ஹர்ஷ டி சில்வா எம்.பி. அறிவிப்பு

நாட்டின் பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதற்கான மாற்றுத் திட்டத்தைத் தயாரித்து வருவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி. ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலார் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமக்குகிடைக்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தை விடவும் அதிகமான வரிச்சேகரிப்பு இடம்பெற்றுள்ளது. அந்த வகையில் 3.1 ரில்லியன் ரூபா சேரிக்கப்பட்டுள்ளது. மொத்த தேசிய உற்பத்தியுடன் பார்க்கின்ற போது 11.2 சதவீத்தம் வரியாகச் சேகரிக்கப்பட்டுள்ளது. ☞ 2

## சேவைக்கு இடையூறு தந்தால் உடனடிப் பதவி இடைநீக்கம்

### மின்சார சபை ஊழியர்களுக்கு எச்சரிக்கை

இலங்கை மின்சார சபையின் சேவைகளுக்கு இடையூறு செய்யும் ஊழியர்களை அல்லது அதன் நிர்வாகத்தினால் வழங்கப்பட்ட அறிவுத்தல்களை மீறுகின்றவர்களை உடனடியாகப் பணி இடைநீக்கம் செய்யுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

அத்துடன், மின்சார சபையின் உத்தேச சீர் திருத்தங்கள் நாடாளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு மின்சார கட்டணங்களை குறைப்பதற்கான யோசனைகளும் அடுத்த வாரம் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடத்தில் சமர்ப்பிக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, ☞ 11

## அடுத்துவரும் 2 நாட்களில் கிழக்கில் மழை குறையும்

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் தற்போது நிலவும் மழை நிலைமை அடுத்த 2 நாட்களில் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் சிறிதளவில் மழை பெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, தென் மற்றும் ஊவா மாகாணங்களிலும் நுவரெலியா மாவட்டத்திலும் பல இடங்களில் பி.ப. 2.00 ☞ 11

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

முழுமையாகத் தங்கியிருந்து செல்ல அனுமதிக்கப்பட்டது. இரண்டாவது தடவை இந்தியா, அமெரிக்காவின்கடும்அழுத்தத்தால் சீனக் கப்பலின் ஆய்வுக்கான நாட்கள் குறைக்கப்பட்டது.

அதன் பின்னர் எதற்கு வம்பு என்று நினைத்த கொழும்பு, அடுத்த ஒரு வருட காலத்திற்கு வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்கள் எவற்றையும் இலங்கைக் கடல் எல்லைக்குள் அனுமதிப்பதில்லைஎன்றுகொள்கை முடிவெடுத்தது. கொழும்பின் இந்த முடிவு இந்தியாவிற்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாக ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஹிந்துஸ்தான்டைம்ஸ்என்றஇந்திய நாளேடு செய்தி வெளியிட்டிருந்தது.

சீனா ஏற்கனவே மற்றொரு ஆய்வுக் கப்பலை அனுப்புவதற்கு கொழும்பிடம் அனுமதி கேட்டிருந்த நிலையில் இந்தக் கொள்கை முடிவு எடுக்கப்பட்டிருந்தது. இதனால் இந்தியாவின் அழுத்தத்திற்கு கொழும்பு மண்டியிட்டுவிட்டது என்று சீனா சீற்றங்கொண்டுள்ளது.

சீனாடெய்லிஎன்கிறநாளேடுஇது தொடர்பில் பெய்ஜிங்கின் சீற்றத்தை நன்கு வெளிப்படுத்தியுள்ளது.

''ஹிந்துஸ்தான் டைம்ஸ் அறிக்கையின்படி, திங்கட்கிழமை முதல் சீன ஆராய்ச்சிக் கப் பல்கள் அதன் இலங்கையின் துறைமுகங்களில்நிறுத்தப்படுவதோ அல்லது அதன் பிரத்தியேக பொருளாதார மண்டலத்தில் இயங்குவதோ இயலாது என்று ஒரு வருட காலத்திற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பது வருத்தமளிக்கிறது. கடந்த ஆண்டு ஜூலை மாதம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நடத்திய சந்திப்பின் போது, இந்தியாவின் 'மூலோபாய மற்றும் பாதுகாப்புக் கவலைகளுக்கு' மதிப்பளிக்குமாறு இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம்இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சீனா டெய்லி பத்திரிகை தெரிவித்துள்ளது.

'இந்திய இராணுவ சோதனைகளைக் கண்காணிக்கவும், மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த நீர்நிலைகளை ஆய்வு செய்யவும்' சீன கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன என்ற புது டெல்லியின்'ஊகத்தை'உறுதிப்படுத்த எந்த ஆதாரமும் இல்லை. இதனால் சர்ச்சைக்குரிய தடையை கொழும்புக்கு வழங்குவதற்கு கிட்டத்தட்ட அரை வருடம் ஆனது. இதனால் இலங்கை மீது இந்தியா கடும்அழுத்தம் கொடுத்துள்ளது. கடைசியில் மோடியின் வேண்டுகோளின் அடிப்படையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேபாளம் உட்பட தனது அண்டை நாடுகளை மிரட்டி, சீனா தொடர்பில் கடுமையான நிலைப்பாட்டை எடுக்க ஊக்குவித்து புது டெல்லி மிக மோசமான முன்னுதாரணத்தை ஏற்கனவே இந்தியா அமைத்துள்ளது. அதன் நிர்ப்பந்தமான நடைமுறையானது பிராந்திய அமைதியையும் ஸ்திரத்தன்மையையும் கடுமையாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்றும் அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதன் எதிர் விளைவுகள் எப்படி அமையப் போகின்றன என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். எப்படி இருந்தாலும் சீனா - இந்தியா இடையேசிக்கிக்கொண்டுஇலங்கை அல்லாடுகிறது; அல்லாடப் போகிறது என்பது மட்டும் திட்டவட்டமாகத் தெரிகின்றது.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிற்கான விசேட அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலும் கலந்துகொள்வார். மாலை 2 மணி தொடக்கம் 3 மணிவரையில் பூநகரிப்பிரதேச அபிவிருத்தி மற்றும் நகரமயமாக்கல் தொடர்பில் பூநகரிப் பிரதேச செயலகத்தில் ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

மாலை 6 மணி முதல் 8 மணி வரை யாழ்ப்பாணத்தில உள்ள தனியார்விடுதியில்இளைஞர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

6ஆம்திகதிகாலை9மணிமுதல் 10 மணிவரையில் யாழ் மாவட்டச் செயலகத்தில் யாழ்ப்பாணம், வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மற்றும் கிளிநொச்சி அறிவியல் நகர் பீடாதிபதி உள்ளிட்ட விரிவுரையாளர்களுடன் சந்தித்துப் பேசுகிறார். தொடர்ந்து 10 மணி முதல் 11.30 வரையில் சர்வ மதப் பிரதிநிதிகள், மீனவ அமைப்புக்கள் ஆகியவற்றுடன் போதனா வைத்தியசாலையின் நலன்புரி சங்க பிரதிநிதிகளுடனான சந்திப்பும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாலை 3 மணிமுதல் 5 மணிவரை மாவட்டச் செயலகத்தில் நிபுணர்களுடனான சந்திப்பும் நடைபெறவுள்ளது.

7 ஆம் திகதி தந்தை செல்வா மண்டபத்தில் பனை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான சந்திப்பும் இடம்பெறவுள்ளதுடன் அதனை முடித்து கொண்டு ஜனாதிபதி கொழும்பு திரும்பவுள்ளார்.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த வடரும் இதனை 13 சதவீமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க் கப்படுகின்றது.

ஆரம்பக் கணக்கில் மிகுதி இருப்பது பொருளியலில் மகிழ்ச் சிக்குரிய விடயமாக இருக்கலாம். எனினும் மக்கள் அனுபவிக்கும் துன்பம் தொடர்பில் கவனம் செலுத்தினால், அது குறித்து மகிழ்ச்சி கொள்ளமுடியாது.

ஐக்கிய மக்கள் சக்தி தனது பொருளாதாரத்திட்டம் சம்பந்தமாக ஆழமாகக் கலந்துரையாடி வருகின்றது. மாஜா ஜாலம் செய்பவரைப் போன்று இதனை நாளை செய்ய முடியும், நாளை மறுதினம் செய்ய முடியும் என்று பொய்யான வாக்குறுதிகளை வழங்காது உண்மையில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான மாற்றுப் பொருளாதாரத் திட்டத்தினை நாம் தயாரித்து வருகின்றோம். ஆட்சி மாற்றம் நடைபெற்றவுடன் எமது பொருளாதாரத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்பிப்போம்.

வௌவ்வாலின் வீட்டுக்குச் சென்றால் தலைகீழாக தொங்க வேண்டும் என்று கூறுவார்கள். அதுபோன்று தான் குறுகிய கால வாக்குறுதிகளைவழங்குபவர்களும் உள்ளனர். எம்மால்அவ்வாறுசெய்ய முடியாது. நாம் பொருத்தமான தருணத்தில் எமது திட்டத்தினை வெளிப்படுத்துவோம்.

சஜித் பிரேமதாசவை ஜனாதிபதியாக்குவதை இலக்காக் கொண்டே நாம் ஐக்கிய தேசியக் கட்சியில்இருந்துவெளியேறினோம். அந்த செயற்றிட்டத்தினை முதலில் அமுலாக்குவோம். கிரிக்கெட் விளையாட்டின்போதுசிக்ஸர், சிக்ஸர் என்று கூறி துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்ய முடியாது. நாம், இலகுவான பந்துகளைப் பார்த்து அடித்து விளையாட வேண்டும். அதுபோன்றுதான்எமது செயற்பாடும் உரிய தருணங்களில் வெளிப்படுத்தப்படும் என்றார்.

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்தனர்.

இச்சமயத்தில் பொலிஸார், பொலிஸ் கலகத்தடுப்பு பிரிவினர், கடற்படையினர், விசேட அதிரடிப்படையினர்உள்ளிட்டவர்கள் இலங்கை மின்சார சபைக்கு முன்பாக அழைக்கப்பட்டிருந்தனர்.

எனினும், தொழிற்சங்கத்தினர் உத்தேச மின்சார சபைச் சட்டமூலத்தினை அமுல்படுத்தாதே, இலங்கை மின்சார சபையை விற்காதே உள்ளிட்ட பல வாசகங்கள்அடங்கியபதாகைகளை தாங்கியவாறு கோசங்களை எழுப்பி போராட்டத்தினை நடத்தியதோடுபிரதானவாயிலையும் முற்றுகையிட்டனர்.

அதனைத்தொடர்ந்து ஊடகங்களுக்குகருத்துவெளியிட்ட, இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டாளர் ரன்ஜன் ஜெயலால்,

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தினை இந்தியாவின் டாட்டா அல்லது, அதானியின் நிறுவனத்திற்கு விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தச் செயற்பாட்டின் பின்னணியில் இருப்பவர்கள், ஜனாதிபதி ரணிலும், அமைச்சர் காஞ்சனவும் ஆவர். அவர்களே இப்போது உத்தேச மின்சாரசபைச்சட்டமூலத்தினையும் நிறைவேற்றுவதற்கு முனைகின்றனர். இந்தச் சட்டமூலத்தினை உடனடியாக வாபஸ் பெறாது விட்டால் நாம் எமது போராட்டத்தினை தீவிரப்படுத்துவோம். தற்போது மூன்று நாட்கள் போராட்ட காலமாக அறிவித்துள்ளோம். இந்தக் காலத்திற்குள் நிலைப்பாடுகள் மாறாது விட்டு சட்டமூலத்தினை பாராளுமன்றத்திற்கு கொண்டு சென்றால், நாம் பாராளுமன்ற சுற்றுவட்டத்தினை நோக்கியும் வருகைதருவோம். அதுமட்டுமன்றி சட்டமூலம்நிறைவேற்றப்படுவதற்கு முதன் நாளின் நண்பகல் 12 மணியிலிருந்துநாம்புறக்கணிப்பில் ஈடுபடுவோம். இந்தப்போராட்டத்திற்கு அரசாங்கத்தின்சுற்றறிக்கையையும் மீறியே பொதுமக்கள் வருகை தந்துள்ளனர். ஆகேவே எமது விடுமுறைகளை இரத்துச் செய்து சுற்றறிக்கைகளைவெளியிடுவதால் எந்தப்பயனும்ஏற்படப்போவதில்லை என்றார்.

# கடினமாக இருந்தாலும் தொடர்ந்தும் இந்தப் பதையிலேயே செல்வோம்

## அதுவே பொருளாதாரத்தை மீட்கும் என்கிறார் ரணில்

எரிபொருள் இல்லாத, உரம் இல்லாத, வீழ்ச்சியடைந்த பொருளாதார யுகத்திற்கு நாட்டை மீண்டும் கொண்டு செல்ல முடியாது என்றும், கடினமாக இருந்தாலும் இந்த பாதையில்செல்வதன்மூலம்நாட்டின்பொருளாதாரத்தை விரைவாக பலப்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் நேற்று இடம்பெற்ற 'ஷில்ப அபிமானி 2023' ஜனாதிபதி கைவினைப் பொருட்கள் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2023ஆம்ஆண்டுகைவினைத்துறையில்திறமையை வெளிப்படுத்தியவர்கள் அடையாளங்காணப்பட்டு அவர்களுக்கு விருது வழங்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக நாட்டில் நிலவிய நெருக்கடி காரணமாக இந்த விருது விழாவை நடத்த முடியாமல் போனது. ஆனால் இந்தக் இக்கண்காட்சியில் கலைஞர்களின் திறமைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத்துறையைஎவ்வாறுமேம்படுத்துவதுஎன்பதில் கவனம் செலுத்த வேண்டும். இலங்கை பாணிகளை மட்டுமன்றி மேற்கத்திய பாணிகளையும் பயன்படுத்தி நாம் பயனடைய வேண்டும். அதை இந்தியா ஏற்கனவே வெற்றிகரமாக செய்து வருகிறது. அதையும் நாம் கவனிக்க வேண்டும். இந்த திட்டங்கள் ஊடாக நாட்டின் வருமானத்தை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்றுமதி துறையில் கவனம் செலுத்த வேண்டும். ஏற்றுமதித் தொழிலில் இருந்து விலகிச் செயல்படுவது இன்று ஒரு நாடாக நமக்கு மிகவும் கடினமான விடயமாகும். அதனாலேயே எதிர்காலத்தில் இந்த கைவினைத் துறையை மேம்படுத்துவதற்கும் வெளிநாட்டு தொழில்நுட்ப அறிவைப் பெறுவதற்கும் அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் தேவையான ஒத்துழைப்பை வழங்க அரசாங்கம் தயாராக உள்ளது .

நாங்கள் மிகவும் கடினமான காலத்தை கடந்துள்ளோம். அந்த இக்கட்டான நேரத்திலும் எப்படியாவது நாட்டின் வருமானத்தை பெருக்கினோம். அதற்காக அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் உங்கள் அனைவரையும் நான் பாராட்டுகிறேன். 2022ஆம் ஆண்டில், நமது நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் வீழ்ச்சியடைந்தது. சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவது தடைப்பட்டது. இந்த கைவினைத் துறை சுற்றுலாத் துறையை நம்பியே உள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாத்து முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது. அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன் நமது பொருளாதாரத்தை மறுசீரமைக்கும் வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது.

2022 இல் கடனை திருப்பிச் செலுத்த முடியாது என்பதை கூறியிருந்தோம். அதன் காரணமாக, சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டை எட்ட வேண்டியிருந்தது. அதனால்தான் நட்டத்தில் இயங்கும் துறைகள் அனைத்தையும் இலாபகரமான துறைகளாக மாற்றி சில நிவாரணங்களை குறைக்க நேரிட்டது.

அதன்படி கடந்த வருடத்தின் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் பொருளாதார ரீதியாக ஓரளவு முன்னேற்றம் காண முடிந்தது. கடந்த வருடத்தின் கடந்த 02 காலாண்டுகளின் முன்னேற்றம் மற்றும் இந்த வருடத்தின் 04காலாண்டுகளின் முன்னேற்றம் குறித்து நாம் இப்போது கவனம் செலுத்தி, இந்த வருடம் 2சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைய திட்டமிட்டுள்ளோம். இந்த ஆண்டு 2சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்டினால், அடுத்த ஆண்டில் 5சதவீதமாக அதனை அதிகரிக்க முடியும். எனவே இந்த பொருளாதார வளர்ச்சியுடன் நாம் முன்னேற வேண்டும். நாம் உடன்பாட்டுடன் செயல்பட வேண்டும்.

நாங்கள் தொடர்ந்து பணத்தை அச்சடித்துக் கொண்டிருந்தது தான் எமக்கிருந்த பாரிய பிரச்சினையாகும். அத்தோடு வங்கிகளில் கடன் பெற்றதனால் ரூபாயின் பெறுமதி மேலும் சரிந்தது. அரசாங்கத்தின் தேவைக்காக வங்கிகளில் கடன் பெற்று இரண்டு அரச வங்கிகளும் வீழ்ச்சியடையும் நிலைக்கு தள்ளப்பட்டன. எனவே, வங்கிகளில் கடன் பெற மாட்டோம் எனவும் பணத்தை அச்சிட மாட்டோம் என்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனவே அரசின் வருமானத்தை அதிகரிக்க வேண்டும்.

இந்த ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியின் ஊடாக 12சதவீத வருமானம் பெற வேண்டும். அதனை 15சதவீத இலக்குடன் நிறைவு செய்யவேண்டியுள்ளது. மொத்த தேசிய உற்பத்தியில் 15சதவீத வருமானத்தைப் பெற முடிந்தால் பொருளாதார ரீதியாக முன்னேறும் பலம் நமக்கு உண்டு.

நமக்கு பணத்தை அச்சடிக்க முடியாமலும், வங்கிகளில் கடன் பெற முடியாமலும் இருந்தால், அரச வருமானத்தை அதிகரிப்பதுதான் நமக்கு இருக்கும் ஒரே வழி. அதன்போது வற் வரியை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டது. அதன்படி, வற் வரி 15 சதவீதத்தில் இருந்து 18சதவீதமாக உயர்த்தப்பட்டது. மேலும், வற் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட பல பொருட்கள் வற் வரியின் கீழ் கொண்டு வரப்பட்டன.

அதன் மூலம் தற்போது நமக்குத் தேவையான வருமானம் கிடைக்கின்றது. இதனால், ரூபாயின் பெறுமதி வலுவடைகிறது. கடினமானாலும் அந்தச் சுமையை நாம் அனைவரும் சுமக்க வேண்டியுள்ளது. இந்த வழியில்தான் நாம் சிரமத்துடனேனும் செல்ல வேண்டும். அதை கைவிட்டால் நமக்கு எதிர்காலம் இல்லை.

மக்களுக்குஅனைத்துவிதமானநிவாரணங்களையும் வழங்குவதற்கு நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குதல், 'அஸ்வெசும' நன்மைகளை மூன்று மடங்காக அதிகரித்தல், மக்களுக்கு இலவச காணி உறுதிகள் வழங்குவது உள்ளிட்ட நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். மேலும், எதிர்காலத்தில் மேலும் நிவாரணம் வழங்கப்படும்.

இந்தவழியைத்தவிரஎங்களுக்குவேறுவழியில்லை. சிலர் பணத்தை அச்சிடுமாறும் வங்கிகளில் இருந்து கடன் பெறுமாறும் கூறுகிறார்கள். அப்படிச் செய்தால் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெற முடியாது. இந்தப் பயணத்தில் சிரமங்கள் இருந்தாலும், ஆண்டின் இறுதியில் ரூபாவின் பெறுமதி வலுவடையும்.

எனவே, இது ஒரு பிரபலமான வேலைத்திட்டம் அல்ல. இதனைத் தவிர வேறு வழியில்லை. யாரேனும் நமக்கு சலுகை பெற முடியும் என்று கூறினால் அதனை முன் வந்து அறிவிக்க வேண்டும். அதே நேரத்தில், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை எவ்வாறு பெறுவது என்பதையும் அவர்கள் அறிவிக்க வேண்டும். எரிபொருள் இல்லாத, உரம் இல்லாத, வீழ்ச்சி அடைந்த பொருளாதாரமற்ற யுகத்திற்கு எமக்கு மீண்டும் திரும்பிச் செல்ல முடியாது.

கடினமாக இருந்தபோதிலும், நாடு இப்போது வளர்ச்சியடைந்து வருகிறது. கடந்த ஆண்டு சுற்றுலாத்துறையில் முன்னேற்றம் ஏற்பட்டது. அதன்படி அத்துறையில் பணிபுரிபவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு, எதிர்காலத்தில் ஏனைய துறைகளில் உள்ள பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.

இருப்பினும், இந்த நேரத்தில் ரூபாவின் பெறுமதியை குறைக்க விரும்பவில்லை. உக்ரைன் போர் நடைபெறுகிறது. காசா போர் உள்ளது. அதன் மூலம் பொருட்களின் விலை அதிகரிக்கலாம். செங்கடலில் கப்பல்கள் மீது ஹூதி குழுவினர் நடத்தும் தாக்குதல்களால் கப்பல் போக்குவரத்து ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல்கள் செங்கடல் ஊடாக பயணிக்காமல் தென்னாப்பிரிக்காவின் ஊடாக சுற்றி வந்தால் அதன் மூலம் பொருட்களின் விலை அதிகரிக்கும். எனவே, ஹூதி நடவடிக்கைகளுக்கு எதிரான பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு ஆதரவாக இலங்கை கடற்படையின் கப்பலை செங்கடலுக்கு அனுப்ப உடன்பட்டுள்ளோம்.

ரூபாவை வலுப்படுத்தி, சரியான பொருளாதார திட்டத்துடன் முன்னேறினால், விரைவாக முன்னேறும் திறன் நம்மிடம் உள்ளது. மேலும், இந்த கைவினைத் துறையும் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் துறையாக மாற்றப்பட வேண்டும் என்பதையும், அதற்குத் தேவையான ஆதரவை வழங்க அரசாங்கம் செயல்பட்டு வருகிறது என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir

# உயிர் காப்பு மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை

## சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு



நாட்டில் பதிவு செய்யப்பட்ட 850 அத்தியாவசிய மருந்துகளில், உயிர் காப்பு மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை. தட்டுப்பாடு காணப்படும் மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்கான சகல வேலைத்திட்டங்களும்முன்னெடுக்கப்பட்டுள்ளனஎன சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

ஜே.என்.1 பிறழ்வு தொடர்பில் சுகாதார அமைச்சு உன்னிப்பாக அவதானித்து வருவதாகத் தெரிவித்த அமைச்சர், காய்ச்சல், தடிமன் போன்ற அறிகுறிகளுடன் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் நோயாளர்களின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன எனவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தற்போது நாட்டில் பதிவு செய்யப்பட்ட 850 அத்தியாவசிய மருந்துகள் காணப்படுகின்றன. அவற்றில் உயிர் பாதுகாப்பு மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை. தட்டுப்பாடுகள் காணப்படும் மருந்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அதே போன்று அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மத்தியில் தீவிரமடைந்திருந்த மந்த போனையைக் கட்டுப்படுத்துவதற்கு யுனிசெப், உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட நிறுவனங்களுடன் இணைந்து பல வேலைத்திட்டங்கள்நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய குறுகிய காலத்துக்குள் ஏற்படும் மந்த போனை நிலைமை தற்போது குறைவடைந்துள்ளது.

இதே வேளை தொற்றா நோய்கள், தொற்று நோய்கள் தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு டெங்கு நோய் காரணமாக 50 மரணங்கள் பதிவாகியிருந்தன. இவ்வாண்டில் இவ்வாறான நிலைமை ஏற்படாமல் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு கடந்த ஆண்டில் இறுதி காலாண்டில் அம்மை நோய் பரவல் சற்று அதிகரித்த போக்கைக் காண்பித்திருந்தது. சில பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு உரிய வயதில் இதற்காக தடுப்பூசியை வழங்காமை இதற்கான பிரதான காரணியாக இனங்காணப்பட்டுள்ளது. எனவே இம்மாதத்தின் இரண்டாம் வாரத்திலிருந்து தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு, அதனை வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜே.என்.1 பிறழ்வு குறித்து சுகாதார அமைச்சு உன்னிப்பாக அவதானித்து வருகிறது. அதிக காய்ச்சல், தடிமன் போன்ற அறிகுறிகளுடன் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படும் நோயாளர்களின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. ஆனால் இலங்கையில் இதுவரையில் ஜே.என்.1 தொற்றாளர் எவரும் இனங்காணப்படவில்லை. எவ்வாறிருப்பினும் சீரற்ற காலநிலையால் காய்ச்சல் உள்ளிட்ட நோய் நிலைமைகளை ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்வதற்காக முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் என்பவற்றைப் பின்பற்றுதல் உகந்ததாகும்.

இவை தவிர, வருடத்துக்கு வீதி விபத்துக்களால் 12 000 பேர் உயிரிழக்கும் துரதிஷ்டவசமான நிலைமை காணப்படுகிறது. குறிப்பாக இளைஞர்கள் அதிகளவில் மோட்டார் சைக்கிளில் விபத்துக்களில் உயிரிழக்கின்றனர். வருடத்துக்கு சுமார் 60 லட்சம் பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுகின்றனர். அவர்களில் 10 லட்சம் பேர் விபத்துக்கு உள்ளானவர்களாக உள்ளனர். எனவே, இது தொடர்பில் இவ்வருடத்திலாவது அனைவரும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். – என்றார். (05)

# அத்தியாவசியப் பொருள்களுக்கான வரியை நீக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குக

## விந்தன் கனகரட்ணம் வலியுறுத்து



அத்தியாவசியப் பொருள்களுக்கான வரியை மீளாய்வுக்கு உட்படுத்தி நீக்குவதற்கான நடவடிக்கை செய்ய வேண்டும் என முன்னாள் வடமாகாண சபையின் உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகசந்திப்பிலே அவர் இதை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

புதுவருடம் தொடங்கி புதுவருட அன்றே புதுவரவு மக்களுக்கு இலங்கை அரசாங்கம் பேரதிச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் முதலாம், இரண்டாம் வாசிப்பிலே சமர்ப்பிக்கப்பட்ட விடயத்தில் உண்மைகளை மூடிமறைத்து 97 பொருள்களின் விலைவாசி உயர்த்தியிருக்கின்றது.

இவ்வருடத்திலே இலங்கை வாழ்மக்கள் மீது பெரும் வரிச்சுமையை அரசு செலுத்தியுள்ளது.

குறிப்பாக வரிக்குள்ளே மதுபானம், புகைத்தல், ஆடம்பர, இலத்திரனியல் பொருள்களுக்காக விலை அதிகரிக்கப்பட்டிருந்தாலும் அத்தியாவசிய பொருள்களுக்குவிலைஉயர்வடைந்திருப்பது பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

கடந்த 30 வருடம் யுத்த நடந்தபோதிலும் கூட இப்படியான வரி அதிகரிக்கப்படவில்லை. விலைவாசியும் அதிகரிக்கப்படவில்லை. பொருட்தட்டுப்பாடுஏற்படவில்லை.

30 வருட யுத்தத்திலும் கூட பல்லாயிரம் ரூபாக்களை செலவளித்த இவ்வரசாங்கம் 30 வருட யுத்தம் முடிந்த பிற்பாடு 2024 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இவ்வளவு வற்வரியிலான சுமையை மக்கள் மீது சுமத்தியுள்ளது.

ஏற்கனவே இருந்த அரசாங்கங்களும் ஊழலுக்கு, மோசடிக்கு, துஸ்பிரயோகத்திற்கு பெயர்போன அரசாங்கங்களாக இருந்தது. மக்களால் விரட்டப்பட்ட அரசாங்கமாக காணப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆதரவு பெறமால் நாடாளுமன்ற பெரும்பாண்மையைப் பெற்றுக்கொண்டு வந்து ஜனநாயக விரோத பாதீட்டை நிறைவேற்றியுள்ளார்.

குறிப்பாக அத்தியாவசியப் பொருட்கள் மீதான வரி அதிகரிப்பானது ஏழை மக்கள், அன்றாடம் கூலித்தொழிலைச் செய்வர்கள், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள், மலையக மக்களது வயிற்றில் பேரிடியாகக் காணப்படுகின்றது.

இவ்பாதீட்டினை சமர்ப்பித்து, மக்களுக்கு எந்த பயனும் இல்லாது வாட்டிவதைக்கின்ற அரசாங்கமாக மாறியுள்ளது. பாதீடு தொடர்பாக குரல்கொடுக்கின்றார்கள்.

நாடாளுமன்றத்தில் பேசக்கூடிய விடயங்களை பேசாமல், தடுத்து நிறுத்தவேண்டிய விடயங்களை தடுத்து நிறுத்தாமல், பாதீட்டுக்கு எதிராக வாக்களிக்கமாலும் இருந்துகொண்டு தற்போது வெளியில்வந்து மக்கள் மீது பாதீடு தொடர்பாகக் குரல் கொடுக்கின்றார்கள்.

அரசாங்கம் வரிசலுகை தொடர்பாக மீளாய்வு செய்ய வேண்டும். உடனடியாக அத்தியாவசியப் பொருள்களுக்கான வரிஜீயை மீளாய்வுக்கு உட்படுத்தி நீக்குவதற்கு நடவடிக்கை செய்யவேண்டும்.

இப்போது அத்தியாவசிய பொருள்களில் வெங்காயம் 530 ரூபா விற்கின்றது. மேலும் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் விண்ணை தொட்டுக்கொண்டு இருக்கின்றது. திரைமறைவிலே திட்டமிட்டு கபடமாக கொண்டுவந்து மக்கள் மீது சுமத்தப்பட்ட வரியை நீக்கவேண்டும். நீக்கத்தவறும் பட்சத்தில் தென்னிலங்கை மக்களும், நாடு பூராக வசிக்கும் மக்களும் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார்கள். அது மக்கள் போராட்டமாக வெடிக்கும். -என்றார். (05)

# இயற்கை அனர்த்தங்களின்போது பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து அறிக்கையிடுக

## வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸ் அறிவுறுத்து



மழை, வெள்ளம், வறட்சி உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து இடர் முகாமைத்துவநிலையம்அறிக்கையிடவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இயற்கை அனர்த்தங்களின் போது சொத்துக்கள், உயிர் சேதங்கள் தொடர்பில் மாத்திரம் அறிக்கையிடப்படுகின்ற போதிலும், பயிர்ச்செய்கைகளுக்கான சேத விவரங்கள் பட்டியலிடப்படாமையால் விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பில் ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அனர்த்தங்களின் போது பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உரிய முறையில் நட்டஈடு கிடைப்பதில்லை எனவும், காப்புறுதிகள் கிடைப்பதில்லை எனவும் விவசாயிகள் தெரிவித்தார்கள். சேத விவரங்கள் தொடர்பில் பட்டியலிடாமையே இதற்குக் காரணம் எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

விடயங்களை ஆராய்ந்த வடக்கு மாகாண ஆளுநர், இந்த விடயங்கள் தொடர்பில் இடர் முகாமைத்துவ நிலையம் அறிக்கையிட வேண்டும் எனத் தெரிவித்தார். மழை மற்றும் வெள்ளத்தின் போதுகள அறிக்கையிடல் முக்கியமானது எனவும், அனர்த்தங்களின் போது ஏற்படும் அழிவுகள் தொடர்பான தரவுகளை இற்றைப்படுத்தி, உறுதி செய்ய வேண்டியது இடர் முகாமைத்துவ நிலையத்தின் கடமை எனவும் இவ்வாறு தரவுகள் இற்றைப்படுத்தப்படும் போது விவசாயிகள் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தவிர்க்க முடியும் எனவும் அத்துடன் இற்றைப்படுத்தப்படும்தரவுகளின்பிரதியை ஆளுநர் செயலகத்திற்கும் சமர்பிக்க வேண்டும் எனவும் ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார். (05)

# புத்தளத்தில் புத்தாண்டு நிகழ்வில் தகராறு சமரசம் செய்யச் சென்றவர் மீது கத்திக்குத்து

புத்தாண்டுமுன்னிட்டுஇடம்பெற்ற நிகழ்வொன்றில் ஏற்பட்ட தகராறில் கத்திகுத்துக்கு இலக்காகி ஒருவர் காயமடைந்துள்ளார்எனப்பொலிஸார் தெரிவித்தனர். இந்தசம்பவம்புத்தளம் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. 20 வயதுடைய இளைஞரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

இவர் குறித்த நிகழ்வில் ஏற்பட்ட தகராறின் போது சமாதானப்படுத்த முற்பட்ட நிலையில் அங்கிருந்த நபரொருவர் இவரது வயிற்று பகுதியில் கத்தியால் குத்தி காயப்படுத்தியுள்ளார்.

காயமடைந்தவர் புத்தளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# பொதுமக்களின் உதவியை நாடுகின்றனர் பொலிஸார்



கொழும்பு, மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொரளை சந்தையில் கடந்த மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தின்போது காயமடைந்து வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டநபர் சிகிச்சைபலனின்றிஉயிரிழந்துள்ளார்.

எவ்வாறாயினும் உயிரிழந்தவர் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனவும் அவரின் சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மருதானை பொலிஸ் போக்குவரத்து பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் உயிரிழந்தவர் தொடர்பில் தெரிந்தவர்கள் மருதானை பொலிஸ் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரியின் 0718594416 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கார் விபத்து மரு தானை, புஞ்சிப்பொரளைக்கு அருகில் இடம் பெற்றுள்ளதுடன் விபத்தை ஏற்படுத்திய கார் தப்பிச் சென்றுள்ளது. எவ்வாறாயினும் குறித்த கார் தொடர் பில் யாரேனும் தெரிந்தவர்கள் இருந்தால் அறிவிக்குமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# 'மூச்சு' திரைப்படத்தின் பாத்திரங்கள் அறிமுகம்



கொடிகாமம் நட்சத்திரமஹால் அனுசரணையுடன் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஈழத்தில் உருவாக்கப்படும் கலைஞானி குமரநாதனின் 'மூச்சு' திரைப்படத்தின் முக்கிய பாத்திரங்களை படக்குழுவினர் அறிமுகம் செய்து வைத்துள்ளனர்.

மூச்சு திரைப்பட கதாநாயகனாக கலைஞானி குமரநாதன்,கதாநாயகியாக ரோனிபெர்னாண்டோ ஆகியோரும், உப கதாநாயகனாக சுபேசன், வில்லன்களாக திருச்செல்வம் மற்றும் எழில்மாறன் ஆகியோர் நடித்து வருகின்றனர்.

மேற்படி திரைப்படம் பல்கலைக்கழக மாணவர்களது தற்கொலை மற்றும் கல்விக்கு வறுமை ஒரு தடை இல்லை போன்ற மையக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இது விரும்பத்தகாத நிலமை

ஆளும் தரப்பின் வற் வரி அதிகரிப்புக்கு எதிரான உணர்வு மக்கள் மத்தியில் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியுள்ளது. வரி அதிகரிப்பைத் தொடர்ந்து பொருள்களின் விலைவாசி எகிறியிருப்பதே இதற்கக் காரணம்.

அதிகரிக்கப்பட்ட வற் வரி தை மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்தாலும் 2023 ஒக்டோபர் மாதமே இந்த அதிகரிப்புக்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியிருந்தது. புதிய மேம்படுத்தப்பட்ட வரியானது முன்னர் விலக்களிக்கப்பட்டிருந்த பல பொருட்களுக்கும் விதிக்கப்பட்டுள்ளது. அவற்றில் பாடசாலைப் புத்தகங்களும் அடக்கம்.

2022இல் நாடு நொடிந்துவிட்டதாக அறிவித்ததில் இருந்து எழும் பொருளாதாரச் சரிவினால் ஏழைகள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் போன்ற சாதாரண குடிமக்கள் அனுபவித்து வரும் சுமைகள் மற்றும் சிரமங்களை காலைக்கதிர் தொடர்ந்து எடுத்துக்காட்டி வருகிறது.

துரதிர்ஷ்டவசமாக, மிகவும் பின்தங்கிய பிரிவினரின் வலியைக் குறைக்க முற்படுவதைவிட, துரதிர்ஷ்டவசமான நலிவடைந்தபிரிவினருக்குஉரியதுவிதமானபாதுகாப்பையையும் வழங்குவதற்குப்பதிலாக, அவர்கள்மீதுமேலும்சுமைகளைச் சுமத்துவது மோசமான செயல் என்று ஆளும் தரப்புக்கு தெரிந்திருக்கவில்லை.

60.5% குடும்பங்களின்மாதவருமானம்குறைந்துள்ளதாக அரசின் சொந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள சமீபத்திய புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன. அதே சமயம் 91% குடும்பங்கள் மாதாந்திரச் செலவு அதிகரிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இன்று, நாட்டின் சராசரி வருமானம் ரூ. 40,000 முதல் ரூ. மாதம் 60,000 என்று மதிப்பிடப்படுகின்றது. நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு மூன்று அடிப்படை உணவு வழங்குவதற்கான செலவு ரூ. 120,000. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பெற்றோர்கள் இருவரும் வேலை செய்து, அதிகபட்ச வரம்பு ரூ. மாதாந்தம் 60,000 உழைத்தால் மட்–டுமே அவர்கள் தமது உணவுக்கு மட்டுமே போதுமான நிதியை வைத்திருப்பார்கள்.

அப்போதுகூட குழந்தைகளின் கல்வி, உடைகள், மருத்துவ செலவுகள், பயணம் அல்லது பொழுதுபோக்கிற்கு தேவையானநிதிஅதில்இல்லை. பொருளாதாரநெருக்கடியால் அனைத்து குடும்பங்களுமே 22% கடன்பட்டுள்ளதாகவும் கணக்கெடுப்பு காட்டுகிறது.

மேலும், இந்த சூழ்நிலையில் தான் ஏற்கனவே அதிக சுமை உள்ள மக்கள் மீது மேலும் வரியைச் சுமத்தியுள்ளது இந்த ஆளும் தரப்பு.

மேலோட்டமாகப்பார்த்தால்நாடுஅமைதியாகஇருப்பதாகத் தோன்றினாலும், 2024 தை முதல் நாளுக்குப் பிந்தைய காலத்தில், வற் அதிர்ச்சியாலும் வரவிருக்கும் பட்டினியை எதிர்கொண்டும் மக்கள் அமைதியாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்த நிலைமையை இந்த நாடு எதிர்கொள்வது இது முதல் முறையல்ல. 1866ஆம் ஆண்டிலும் இதேபோன்ற சூழ்நிலையை எதிர்கொண்டனர். அப்போது, இன்று போல், உள்ளூர் அரிசி உற்பத்தியில் ஏற்பட்ட பற்றாக்குறையை சமாளிக்க, இறக்குமதி செய்யப்பட்ட அரிசியையே நாடு நம்பியிருந்தது. அப்போதும் கலவரம் வெடித்தது.


1796 ஆம் ஆண்டில், பிரிட்டன் நாட்டைக் கைவசப்படுத்தியதைத் தொடர்ந்து, வருவாயை உயர்த்துவதற்கான வழிமுறையாக வரிகளை அதிகரித்தது. 1866 ஆம் ஆண்டில், இந்தியாவில் ஒரு பெரும் பஞ்சம் ஏற்பட்டது, அதன் நெல் பயிரை நாசமாக்கியது மற்றும் மில்லியன் கணக்கான இந்திய மக்களைக் கொன்றது.

அந்த பஞ்சத்தின் வீழ்ச்சியால் சந்தையில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதையொட்டி அரிசியின் விலை மும்மடங்காக உயர்ந்தது, இது அரிசியை நம்பியிருந்த பெரும்பாலான ஏழை இலங்கைக் குடும்பங்களை வறுமையில் ஆழ்த்தியது.

பிரிட்டிஷ் காலனித்துவ அரசு நிலைமையைத் தணிக்க எதுவும் செய்யவில்லை, மக்கள் பட்டினியால் வாடினர். விளைவு, ஒக்டோபர் 21மக்கள் கடைகளை உடைத்து சூறையாடத் தொடங்கினர். இதனால் கலவரம் வெடித்தது. கடை உரிமையாளர்கள் தங்கள் சொத்துக்களைப் பாதுகாக்க ஆயுதம் ஏந்தினர்.

பட்டினியால் வாடும் மக்கள் மீது அரசு அதிகாரிகள் செவிசாய்க்கவில்லையென்றால், இன்றும் இதே நிலையைத்தான் சந்திக்க நேரிடும். இதே நிலை நீடித்தால், 1866இல் நடந்ததைப் போல் குடிமக்கள் வீதிக்கு வரும் நிலைக்குத் தள்ளப்படுவதற்கு வெகு காலம் ஆகாது.

பிரெஞ்சுப் புரட்சியின் போது பிரான்சில் நெப்போலியன் செய்தது போல், இந்த நாட்டின் பசியால் வாடும் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த சில இராணுவத் தளபதிகள் தனது படைகளுக்கு கட்டளையிடும் நாளை நாம் பார்க்கக்கூடாது என்றே விரும்புகின்றோம்.



# நூல்களே செல்வம்!

**மு.வீரையன்**


உலகம் வெளிச்சத்தைத் தேடியே ஓடிக் கொண்டிருக்கிறது. பூமி தோன்றிய காலத்திலிருந்து இரவும், பகலும் மாறி மாறி வந்து போகின்றன. இரவும், இருட்டும் பிரிக்க முடியாதவை என்பதால் அதனால் ஏற்படும் அச்சத்திலேயே மனித சமு–தாயம் வாழ்ந்தது. ஆனால் இரவும், பகலும் மாறி மாறி வருவதையே காலப்போக்கில் மனித சமுதாயம் ஆனந்தமாக அனுபவித்தது. நிலமையைப் புரிந்துகொண்டு அதற்கேற்பத் தன்னைத் தகவமைத்துக்கொண்டது.

அறியாமை என்பதே உலகின் மிகப்பெரும் இருட்டாகும். அறிவு வெளிச்சம் வந்ததும் அந்த இருள் கொஞ்சம் கொஞ்சமாக அகலுகிறது. அறிவைப் பெறுவதற்கே கல்வியும், புத்தகங்களும் தேவைப்பட்டன. நாகரிக சமுதாயம் அவற்றைத் தேடியே கையகப்படுத்திக் கொண்டது. உலகில் நாகரிகத்தின் உச்சமே மனிதன் வாசிக்கும் பழக்கத்தை தேடிக் கொண்டதுதான்.



நூல்கள் எப்போதும் ஒரு நாகரிகத்தின் சின்னம், பண்பாட்டின் அடையாளம், அறிவு வளர்ச்சியின் குறியீடு, வளர்ந்து வரும் சமுதாயத்தின் முன்னோடி, அந்தந்த காலச் சூழலை எடுத்துக் காட்டும் கண்ணாடி, இது வெறும் காகிதமல்ல ஆயுதம்; அதுவும் அறிவாயுதம்.

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு' என்பார் வள்ளுவர். அறிவுக்கு இலக்கணம் கூறும் திருக்குறள் அது. அத்தகைய அறிவை வளர்க்கவும், சிந்தனையைத் தூண்டவும் துணையாக இருப்பவை நூல்களே! மிகப்பெரிய சமுதாய மாற்றங்களுக்கும், பூமியையே புரட்டிப் போட்ட புரட்சிகளுக்கும் நூல்களேஆயுதங்களாகப் பயன்பட்டன.



புத்தகம் இல்லாத வீடு, ஜன்னல் இல்லாத அறை போன்றது. எந்த வீட்டில் நூலகம் இருக்கிறதோஅந்தவீட்டில் ஆன்மா இருக்கிறது' என்று சிந்தனையாளர் பிளேட்டோ கூறியுள்ளார். நாடும், வீடும் இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

18ஆம் நூற்றாண்டை புரட்சியின் யுகம்' என்று கூறுவர். இந்த நூற்றாண்டில்தான் ஐரோப்பாவில் மத்தியதர வர்க்கம் விழித்தெழுந்து செல்வத்தையும், செல்வாக்கையும் பெற முயன்றது. நிலப்பிரபுத்துவத்தின் ஆதிக்கத்திலிருந்து மத்திய தர வர்க்கத்தின் ஆளுகைக்குப் பொருளாதார, அரசியல் துறைகள் பெயரளவில் மாறுவதற்கு வால்டேர், ரூசோ என்னும் சிந்தனையாளர்களின் நூல்களே காரணம் ஆகும்.

பொதுமக்களே! விழித்து எழுங்கள். உங்கள் கைவிலங்குகளை உடைத்தெறியுங்கள்' என்ற வால்டேரின் சுதந்திரக் குரல் பிரெஞ்சு மக்களைத் தட்டி எழுப்பியது. கொடுங்கோலர்களை எதிர்த்துப் போராடும் நெஞ்சுரத்தைப் பெற்றுத் தந்தது. மன்னர் ஆட்சியைத் தூக்கியெறிந்து மக்களாட்சியை உருவாக்கும் மாபெரும் பிரெஞ்சுப் புரட்சி ஏற்பட்டது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'' என்ற அந்தப் புரட்சி முழக்கம் வானை முட்டி எங்கும் எதிரொலித்தது.

என்னுடைய தொழில், நான் சிந்திப்பதைச் சொல்லுவதுதான்' என்றார் வால்டேர். அவர் சிந்தித்தவை நாடகங்கள், நவீனங்கள், கவிதைகள், கட்டுரைகள், அறிக்கைகள், கடிதங்கள் என ஏறத்தாழ நூறு நூல்களில் இடம் பெற்றுள்ளன. இவை காலத்தை வென்று இன்றும் நின்று நிலவுகின்றன. பிரெஞ்சு மொழிக்கே இவை பெருமையை தேடித் தந்தன.

மனித சமுதாயத்தையே மாற்றியமைத்த ரூசோவின் சமுதாய ஒப்பந்தம்' அதிகார வெறியர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. அந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துகளை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். ஆனால் அக்கருத்துகளைச்சொல்வதற்குஉனக்குள்ள உரிமைக்காக நான் சாகும்–வரை போராடுவேன்' என்று வால்டேர் குமுறி எழுந்து ரூசோவுக்கு ஆதரவாகக் குரல்கொடுத்தார். அனைவரும் அடிமைப்பட்டுக்கிடந்த காலத்தில் அவரே விடுதலைக்காகப் பாடுபட்டார்.

(5ஆம் பக்கம் பார்க்க...)

# நூல்களே செல்வம்!........

வீட்டை கட்டிப்பார்; கல்யாணம் பண்ணிப்பார்' என்பார்கள். ஏனெனில், அவை கடினமான செயல்கள் என்பதற்காகவே! அதைப்போலவே, நூல்களை எழுதிப்பார்' என்பதனையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். எழுதுவது அத்துணை எளிய செயல் அல்ல. பல மலர்களைத் தேடிச் சென்று தேனைச் சேகரிக்கும் வண்டுகளைப் போல சொல்ல வேண்டிய செய்தி களை சிந்தனையாளர்கள் சேகரிக்கின்றனர்.


மாமேதை ராகுல்ஜி எனும் ராகுல சாங்கிருத்யா யன் சமுதாயத்தின் தோற்றம், வளர்ச்சி, நாகரிகம் முதலிய-வற்றைப் பற்றித் தத்துவரீதியாக மனித சமுதாயம்' என்ற பெயரில் நூலைப் படைத்துள்ளார். அவரே கூறியிருப்பது போல, அந்த முக்கிய பிரச்னைகளை சாதாரண மக்களும் புரிந்து கொள்வதற்காக, வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலை எழுதியிருக்கிறார்.

ராகுல்ஜி அறிவைச் சேகரிப்பதற்காக உலகத்தின் மூலை முடுக்குகளையெல்லாம் சுற்றியிருக்கிறார். ஐக்கிய மாநிலத்தி ன் ஆஜம்கட் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு சிறு கிராமத்தில் பிறந்த இவர், காசி நகரிலே தொடங்கிய தமது அறிவு சேகரிக்கும் முயற்சியை, லெனின்கிரேடு பல்கலைக்கழகப் பேராசிரியர் பதவியைப் பெற்ற பிறகும் தொடர்ந்து செய்து வந்திருக்கிறார். ஆயுள் முழுவதும் உழைத்துச் சேகரித்த

அறிவுக் கருவூலத்தை அவருடைய நூல்களிலே அள்ளித் தந்திருக்கிறார்.

இந்த நூலிலுள்ள கதை ஒவ்வொன்றிற்கும் பின்னால் அந்தந்த காலத்தைக் காட்டும் பலமான ஆதாரங்கள் இருக்கின்றன. உலகத்தில் எத்தனையோ மொழிகளில் உள்ள தர்க்க ரீதியான மொழியாராய்ச்சி, மண், கல், தாமிரம், பித்தளை, இரும்பு இவற்றில் எழுதப்பட்டும், செதுக்கப்பட்டும் உள்ள வரலாறு, இலக்கியங்கள், எழுத்து வடிவம் பெறாத பாடல்கள், கதைகள், பல நாட்டின் பழக்க வழக்கங்கள், புதைபொருள்கள் இவற்றில் இருந்தெல்லாம் ஆதாரங்கள் திரட்டப்பட்டிருக்கின்றன" என்று கூறும் ராகுல்ஜி, அந்தக் கதைகளுக்கு ஆதாரமான நூல்களின் பட்டியலைச் சேர்க்கவில்லை. அதற்கு அவர் கூறும் காரணம், அப்படிச் சேர்த்தால் அது இந்நூலின் இணைப்பாக இல்லாமல் இதைவிடப் பெரியதோர் நூலாக ஆகிவிடும்'' என்பதே.

இவ்வாறு பல காலம் முயன்று உருவாக்கப்பட்ட படைப் புகள் அந்தந்த காலத்தில் வரவேற்கப்பட்டிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. பழைமைவாதிகளின் கடுமையான எதிர்ப்புகளுக்கு ஆளாகியுள்ளன. அவற்றை எழுதிய குற்றத்திற் காகவே அவர்கள் தண்டிக்கப்பட்டனர்; நாடு கடத்தப்பட்டனர்; அவர்களது அரிய படைப்புகளும் எரியூட்டப்பட்டன. ஆனால் அவர்கள் காலம் கடந்து பாராட்டப்படுகின்றனர்.



பிரெஞ்சுப் புரட்சியின் பிதாமகர்களாகக் கருதப்படும் இரட்டையர்களான வால்டேர், ரூசோ இவர்களும் இவ்வாறு அக்கால ஆட்சியாளர்களால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களே! வால்டேர் சமூக ஒழுக்கத்தைக் கெடுப்பவர் என ஆட்சியாளர்கள் குற்றம் சாட்டினர். மத விரோதி என்று மதவெறியர்கள் பழி தூற்றினர். நரகத்தின் வாசற்படி'' என்று அவரைக் கண்டு வைதிகர்கள் நடுங்கினர். இறுதியில் வால்டேர் சிறையில் தள்ளப்பட்டு, அங்கிருந்து நாடு கடத்தப்பட்டார்.

1791ஆம் ஆண்டு வெடித் தெழுந்த பிரெஞ்சுப் புரட்சியின் போது, ரூசோவின் பூதவுடல் புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்டு பாரீஸ் நகரில் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. கொடுங்கோன்மையின் சின்ன மாக விளங்கிய பாஸ்டில்' சிறைக்கோட்டத்தைத் தரைம ட்டமாக்கி, அதன் அழிவுக் குவியல் மீது ரூசோவின் சடலம் வெற்றிச் சின்னமாக ஓர் இரவு முழுவதும் வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு உலகம் முழுவதும் சிந்தனையாளர்கள் தங்கள் படைப்புகளுக்காகத் தண்டிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் நடந்த இனப்படுகொலையின்போது இலங்கைத் தமிழ்ப் பத்தி ரிகையாளர் ஜே.எஸ். திசைநாயகத்துக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து கொழும்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. பல பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

எத்தனை அடக்குமுறைகள் வந்தால் என்ன, அடிக்க அடிக்கப் பந்து எழுவது போலவும், அரைக்க அரைக்கச் சந்தனம் மணப்பது போலவும் சிந்தனையாளர்கள் சிலிர்த்து எழுகின்றனர். அவர்களால் ஆக்கப்பட்ட நூல்கள் இப்போது உலகத்தையே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. படித்த உலகத்தைத் தவிர்த்து, பாமரர்களும் புத்தகங்களின் அருமையை உணரத் தலைப்பட்டுள்ளனர். அறிவைப் பரப்புவதற்கும், உலகெங்கிலும் உள்ள பலவேறு கலாசாரங்களைப் பற்றிய விழிப்புணர்வு பெறுவதற்கும், புரிதல், சகிப்புத்தன்மை போன்றவை மூலம் மனிதர்களின் ஒழுக்கத்தை மே ம்படுத்தவும் புத்தகம் ஒரு சிறந்த கருவியாக இருக்கிறது.

ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்" என்று ஔவை-யார் பாடியது பள்ளி மாணவர்களுக்கு மட்டுமல்ல, நம் அனைவருக்கும்தான். ஆனால், தொலைக்காட்சி போன்ற வலிமை மிக்க ஊடகங்கள் இளைஞர்கள் கவனத்தை தி சைதிருப்பவே செய்கின்றன.

புத்தகங்களுக்காகச் செலவிடுபவை செலவு அல்ல, அது மூலதனம்' என்றார் அறிஞர் எமர்சன். எல்லாச் செல்வங்களும் அழியும் தன்மை கொண்டவை; அறிவுச் செல்வமே வளரும் தன்மை கொண்டது. அதற்கான கருவிகளாக இருப்பவை புத்தகங்களே! அவற்றை நாம் கற்போம்; பிறருக்கும் கற்பிப்போம்!


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்ஹிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்





தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்



5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து விவகாரம்; நிறுவனங்களிடையில் ஒருங்கிணைப்பில்லை

## துறைசார் மேற்பார்வைக் குழு தெரிவிப்பு

எக்ஸ்பிரஸ் பேர்ள் பேரழிவுக்கான இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதில் தற்போதைய முன்னேற்றம் மற்றும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் உதவியைப் பெற்றுக்கொண்டு சுற்றுச் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பை மதிப்பீடு செய்யும் பணியை எதிர்காலத்தில் முன்னெடுப்பதா என்பது தொடர்பில் சுற்றாடல் இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் ஆராயப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயம் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டிய விதம் மற்றும் அதன் எதிர்காலத் தேவை குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கடிதம் மூலம் வினவியிருந்தபோதும், இது தொடர்பில் தமக்கு இதுவரை எவ்விதமான பதிலும் கிடைக்கவில்லையென அந்நிறுவனத்தின் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இருந்தபோதும் பாதிப்பை மதிப்பீடு செய்யும் பணியைத் தொடர சர்வதேச சுயாதீன நிபுணர் குழு நியமிக்கப்பட்டு மேலதிக பணிகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என நீதி அமைச்சிடமிருந்து தமக்குத் தகவல் வழங்கப்பட்டிருப்பதாகவும், அதன் விளைவாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் உறுதியான முடிவொன்று இல்லையென்றும் அந்நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் இது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொண்டு வரும் பணிகளைத் தமது நிறுவனத்துக்குத் தெரியப்படுத்தப்படாமல் இருப்பதும் பிரச்சினையாக உள்ளது என கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் மதிப்பீடுகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லையென்றும், அதற்கான பணத்தை வழங்கக்கூடிய வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வதற்கு அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதுடன், 2023ஆம் ஆண்டுக்கு நிபுணர்கள் குழுவுக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்படவில்லையென்பதும் இங்கு புலப்பட்டது.

இந்தக் குழுவின் அமர்வில் கலந்துகொண்ட நிபுணர்கள் குழுவின் இணைத்தலைவர் பேராசிரியர் அஜித் டி அல்விஸ், தனது கல்வித் தகுதிகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களிடம் விசாரிக்கப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டினார். நிபுணர்கள் குழுவிற்கு நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்களின் நியமனம் மற்றும் அவர்களின் கல்வித் தகுதிகள் குறித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் வினவப்பட்டுள்ளதாகவும் அதிகாரசபையின் அதிகாரிகள் குழுவில் தெரிவித்தனர்.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, கடற்றொழில் அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையில் சரியான ஒருங்கிணைப்பு இல்லாமை குறித்தும் குழுவில் கரிசனை தெரிவிக்கப்பட்டது. இதனால் கடற்றொழில் இழப்பீடுகளை பெற்றுக்கொள்வதற்கும் சிக்கல்கள் பல எழுந்துள்ளதாக குழுவில் புலப்பட்டது. எனவே சட்டமா அதிபர் திணைக்களம், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, கடற்றொழில் அமைச்சு கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையால் நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து எதிர்காலத் திட்டமொன்றைத் தயாரித்து அது பற்றி குழுவுக்கு அறிக்கையளிக்குமாறு குழுவின் தலைவர் ஆலோசனை வழங்கினார்.

மேலும் இந்தக் கப்பல் விபத்தால் ஏற்பட்ட பேரழிவு உலகில் மைக்ரோ பிளாஸ்டிக்கால் ஏற்பட்ட மிகப்பெரிய அழிவு என்பதால் இது குறித்து மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால் நிபுணர் குழுவின் ஆய்வுக்கு அனுமதி வழங்கவும் அமைச்சரவையிடம் கோரிக்கை விடுப்பதற்கும் அதற்கான வசதிகளை வழங்குவதற்கு இங்கு முடிவுசெய்யப்பட்டது. (05)

# டுபாய் போதைப்பொருள் வியாபாரியால் பிலியந்தலையில் விகாரை நிர்மாணிப்பு

டுபாயிலிருந்து போதைப்பொருள் வர்த்தகத்தை நடத்தி வரும் ஷிரான் பாசிக் என்பவர் பிலியந்தலையில் விஹாரைஒன்றைநிர்மாணித்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

தற்போது வெளிநாட்டில் இருக்கும் பாரிய போதைப்பொருள் கடத்தல் காரரான ஷிரான் பாசிக் என்பவருக்குச் சொந்தமான தெஹிவளை பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்று சட்டவிரோத கட்டுமானம் எனத் தெரிவித்த கடலோர காவல்படை அதிகாரிகள், பொலிஸாரின் உதவியுடன் திங்கட்கிழமை அதனை அகற்றினர்.

இந்த அனுமதியற்ற கட்டுமானங்களை அகற்றச் சென்ற அரசாங்க அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். (05)

# மனநலம் பாதிக்கப்பட்ட மகளால் தாக்கப்பட்டு தந்தை உயிரிழப்பு

காலி - வதுரம்ப பிரதேசத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட மகளால் தாக்கப்பட்டு தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார் என காலி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் காலி - வதுரம்ப பிரதேசத்தை சேர்ந்த 54 வயதுடையவராவார்.

மனநலம் பாதிக்கப்பட்ட 22 வயதுடைய தனது மகளுக்கு மருந்துகளை உணவில் கலந்து கொடுக்கும் போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர் மாரடைப்பு நோயால் பாதிக்கப்பட்டவர் என்பதோடு குறித்த தாக்குதலில் காயமடைந்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்தின் போது வீட்டில் இருந்த தாயும் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மீன் வியாபாரி ஒருவர் யானை தாக்கி காயம்

யானை தாக்கியதில் நபரொருவர் காயமடைந்துள்ளார் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று (புதன் கிழமை) காலை 7 மணியளவில் வாகனேரி பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி - மீராவோடை நூராணியா வீதியைச் சேர்ந்த 52 வயதுடைய மீன் வியாபாரி வியாபாரத்துக்கு செல்லும் போதே இவ்வாறு யானை தாக்கி படுகாயமடைந்துள்ளார்.

யானை தாக்குதலுக்குள்ளான நபர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்;க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)



## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடுவது மின்சார சபையின் ஒழுக்க விதிகளுக்கு முரணானதாகும்.

மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய தவறான தகவல்கள், நிறுவனத்துக்கு அவதூறை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களை ஏதேனும் ஒரு ஊழியர் வெளியிடுவதானது, பாரதூரமான குற்றமாகும்.

மேலும் இத்தகைய தரவுகளையோ, தகவல்களையோ சமூக ஊடகங்களில் தரவேற்றம் செய்யவோ அல்லது பகிரவோ, கூடாது. அத்துடன் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தொலைபேசிகளைப் பயன்படுத்திவலையமைப்புக்களை ஏற்படுத்தி தரவுகளை, தகவல்களை பகிருவதானதுநிறுத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாராவது கூறினால், அவர் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எதிரானவர் என்பதைக் குறிப்பிட வேண்டும். நாட்டிற்குக் கிடைக்கும் வரி வருமானத்தில் இருந்து நாட்டின் எதிர்காலத்துக்காகமுதலீடுகள்செய்யப்படுமானால், அதற்குத் துணை நிற்க வேண்டியது ஒட்டுமொத்த மக்களின் பொறுப்பாகும்.

நாட்டின் வருமானம் குறைவு, வரி அதிகம் என்று ஏராளமானோர் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். மொத்தமாக எடுத்துக்கொண்டால், எமது நாட்டில் 12சூ என்ற அளவிலேயே வரி வசூலிக்கப்படுகின்றது. ஆனால் நாட்டை விட்டு வெளியேறி தொழிலுக்காகச்செல்லும்நாடுகளின் வரி சதவீதம் 38சூ முதல் 43சூ அளவில் உள்ளது. அந்நாடுகளில் இத்தகைய வரிவிதிப்பு முறைகள் இருப்பதனால் அந்நாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

வெங்காயஏற்றுமதியைஇந்தியா நிறுத்தியதால், நாட்டிற்கு அதிக சுமை ஏற்பட்டுள்ளது. ஆனால் அடுத்த இரண்டு வாரங்களில் வெங்காய ஏற்றுமதியை இந்தியா எளிதாக்கிய பிறகு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

எனினும், வற் மற்றும் வரி அதிகரிப்பு தொடர்பாக எவ்வித ஆய்வும் மேற்கொள்ளாமல், ஊடகங்கள் மூலமாகவும், பல்வேறு வழிமுறைகள் மூலமாகவும் முறையற்ற வகையில் விளம்பரம் செய்வதேஎமக்குஏற்பட்டுள்ளபாதிப்பு என நம்புகின்றோம். இந்நிலையில் இடைத்தரகர்களும்,நிறுவனங்களும் தமது விருப்பத்துக்கு விலையை உயர்த்துவதால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், லங்கா ச.தொ.சவினால் 05 புத்தம் புதிய மெகா விற்பனை நிலையங்களையும் 10சாதாரண லங்கா ச.தொ.ச. விற்பனை நிலையங்களையும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், வருட இறுதிக்குள் லங்கா ச.தொ.ச. விற்பனை நிலைய வலையமைப்பை 500 ஆக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில், லங்கா சதொச நிறுவனத்தின் மொத்த வருமானத்தை சுமார் 70பில்லியன் ரூபாவாக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது, இதன் மூலம் நாட்டின்பொருளாதாரசவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் நிறுவனத்தின் மொத்த இலாபம் 1.5பில்லியன் ரூபாவாகவும், நிகர இலாபம் 500 மில்லியன் ரூபாவா வரைபாதுகாக்கதிட்டமிடப்பட்டுள்ளது.

நுகர்வோருக்கு மானிய விலையில் தட்டுப்பாடு இன்றி பொருட்களை கொள்வனவு செய்வதற்கானவாய்ப்பைவழங்கும் நோக்கிலேயே சதொச விற்பனை நிலைய வலையமைப்பு 500ஆக விரிவுபடுத்தப்படவுள்ளது.

2024ஆம்ஆண்டில், நுகர்வோர் அதிகார சபைக்கான புதிய வேலைத்திட்டமொன்றைஉருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். அளக்கும் அலகுகள் தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் முழுமையாக கணனிமயப்படுத்தப்பட்டுமக்களின் தேவைகளை நிறைவேற்ற முதல் நான்கு மாதங்களுக்குள் முன்னெடுக்கப்படும் என்பதையும் குறிப்பிட வேண்டும் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# உடுப்பிட்டியில் மக்களின் எதிர்ப்பையும் மீறி திறக்கப்பட்ட மதுபானசாலைக்கு எதிர்ப்பு









யாழ்ப்பாணம் – உடுப்பிட்டி பகுதியில் உள்ள மதுபான சாலைக்கு எதிராகக் கண்டனப் போராட்டம் புதன்கிழமை காலைமுன்னெடுக்கப்பட்டது. உடுப்பிட்டி சந்தியில் நடைபெற்ற போராட்டத்தில் பெருமளவானவர்கள் கலந்துகொண்டனர். இதற்கு வலுச்சேர்க்கும் வகையில் உடுப்பிட்டி பகுதியில் கடையடைப்பும் இடம்பெற்றது.

உடுப்பிட்டியில் மக்களின் எதிர்ப்பையும் மீறி மீள திறக்கப்பட்ட மதுபானசாலையால் கடுமையாக மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் அதனை உடனடியாக அகற்றக்கோரி உடுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள கடைகளை பூட்டி கடையடைப்பிற்கு உடுப்பிட்டி சமூகமட்ட அமைப்புக்கள் ஒன்றாகச் சேர்ந்து அழைப்புவிடுத்தது.

போராட்டத்தின் இறுதியில் பிரதேச செயலகத்திற்கு பேரணியாகச் சென்று ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கப்படவுள்ளதுடன் அதன் பிரதிகள் பல்வேறு தரப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது. (05)

# வரி அறவீடு உள்ளிட்ட மறுசீரமைப்புகள் இன்றேல் லெபனான், ஆர்ஜென்டீனா நிலையையே ஏற்படும்

## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை



நாட்டுமக்கள் தற்போது மிகக்கடினமான சூழ்நிலைக்கு முகங்கொடுத்திருப்பதால், வரி அறவீடுகள் உள்ளிட்ட மறுசீரமைப்புகள் தொடர்பில் யாராலும் விமர்சனங்களை முன்வைக்கமுடியும். ஆனால் இம்மறுசீரமைப்புக்களை மேற்கொண்டிருக்காவிடின், நாம் எந்த நிலையில் இருப்போம் என்பது பற்றி எவரும் சிந்திப்பதில்லை. பொருளாதார நெருக்கடியை அடுத்து உடனடி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்தியிருக்காவிடின் நாம் லெபனான், ஆர்ஜென்டீனா, பாகிஸ்தான் போன்றநாடுகளின்நிலையைத்தான்அடைந்திருப்போம். ஆனால் இவ்வாறான மிகமோசமான நெருக்கடிக்கு முகங்கொடுத்த ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக்குறுகிய காலத்தில் அதிலிருந்து விரைவாக மீண்ட ஒரேயொரு நாடு இலங்கை மாத்திரமே என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு முதல் அமுலுக்குவரும் பெறுமதிசேர் வரி (வற்வரி) விதிப்பு உள்ளடங்கலாக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இந்நிலையில் இம் மறுசீரமைப்புக்கள் பற்றியும், நாம் பயணிக்கவேண்டிய பாதை குறித்தும் தெளிவுபடுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலொன்றில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில்அவர்மேலும்கூறியவைவருமாறு-

எமது நாடு கடந்த 2022 ஆம் ஆண்டு முன்னொருபோதுமில்லாத வகையிலான மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்தது. குறிப்பாக பொருளாதாரம் 8 சதவீதத்தால் சுருக்கமடைந்ததுடன் பணவீக்கம் சடுதியாக பெருமளவால் அதிகரித்தது. வெளிநாட்டுக் கையிருப்பின் அளவு வீழ்ச்சியடைந்ததுடன் வெளிநாட்டுக்கடன் மீள்செலுத்துகை இடைநிறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து 2023 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் சரியான பாதையில் கொண்டுசெல்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன்விளைவாக பணவீக்கம் குறைக்கப்பட்டமை, வெளிநாட்டுக்கையிருப்பு மட்டம் உயர்வடைந்தமை உள்ளிட்ட பிரதிபலன்களை அடைந்துகொள்ளமுடிந்ததுடன் பொருளாதாரம் மீண்டும் சரியான பாதையில் பயணிக்க ஆரம்பித்தது. பொருளாதார மீட்சியை முன்னிறுத்தி மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்கள் மிகக்கடினமானவையாக இருப்பினும், அவற்றைத் தொடர்ந்து சீராக முன்னெடுத்துச்செல்வதன் மூலம் இவ்வாண்டில் சிறந்த முன்னேற்றத்தை அடைந்துகொள்ளமுடியும். குறிப்பாக 2024 இல் 3 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்வதற்கும், பணவீக்கத்தை 5 சதவீத மட்டத்தில் பேணுவதற்கும், ஏற்றுமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் மூலம் வர்த்தக செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கும் எதிர்பார்த்திருக்கின்றோம்.

தற்போதைய சூழ்நிலை மிகவும் கடினமானதாக இருப்பதால், அதுகுறித்து யாராலும் பல்வேறு விமர்சனங்களை முன்வைக்கமுடியும். ஆனால் நாம் முன்னெடுத்திருக்கும்மறுசீரமைப்புக்களையும், கடினமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்காவிடின், நாம் எந்த நிலையில் இருப்போம் என்பது பற்றி பொதுமக்கள் சிந்திப்பதில்லை. உண்மையில் நாம் உடனடி மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்தியிருக்காவிடின் லெபனான், ஆர்ஜென்டீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் நிலையைத்தான் அடைந்திருப்போம். இவ்வாறான மிகமோசமான நெருக்கடிக்குமுகங்கொடுத்தநாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக்குறுகிய காலத்தில் அதிலிருந்துவிரைவாகமீண்டஒரேயொரு நாடு இலங்கை தான்.

அடுத்ததாக நாம் 2022 ஆம் ஆண்டு ஏப்ரலில் உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்களுக்கான கடன்மீள்செலுத்துகையைத் தற்காலிகமாக இடைநிறுத்தினோமே தவிர, நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருப்பதாக அறிவிக்கவில்லை. வங்குரோத்துநிலை என்பது கடன்களை மீண்டும் எப்போதும் செலுத்தப்போவதில்லை எனும் நிலையாகும். அவ்வாறான சூழ்நிலையில் யாரும் எமக்கு கடன்வழங்க முன்வரமாட்டார்கள். ஆனால் நாம் கடன்மீள்செலுத்துகையைத் தற்காலிகமாக இடைநிறுத்தியதன் மூலம் கடன்மறுசீரமைப்பின் ஊடாகக் கடன்களை மீளச்செலுத்துவதற்குரிய காலப்பகுதியை நீடிக்குமாறு கோரினோம். அதுமாத்திரமன்றி அவ்வேளையில் (2022 ஏப்ரலில்) எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப்பொருள்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தோம். 2022 ஏப்ரல் - ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் காணப்பட்டதைஒத்தநிலைதொடர்ந்திருந்தால், நாட்டின் பொருளாதாரம் முற்றாக சீர்குலைந்திருக்கும். ஆனால் நாம் ஒப்பீட்டளவில் விரைவாக மீட்சியடைந்து சரியான திசையில் பயணித்துக்கொண்டிருக்கின்றோம்.

அதேபோன்று விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைவாக கடன்மறுசீரமைப்பு செயன்முறையிலும் குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளன. குறிப்பாக இந்தியா, சீனா மற்றும் 'பாரிஸ் கிளப்' நாடுகள் கடன்மறுசீரமைப்புக்கு இணக்கம் தெரிவித்துள்ளன. மறுபுறம் வர்த்தகக் கடன்வழங்குநர்களுடனான கடன்மறுசீரமைப்பு இணக்கப்பாட்டை இவ்வருடத்தில் எட்டமுடியுமெனக் கருதுகின்றோம். எனவே கடன் ஸ்திரத்தன்மையை அடைவதற்கு இன்னும் சொற்பளவிலான நடவடிக்கைகளையே முன்னெடுக்கவேண்டியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது முன்னெடுக்கப்படும் சகல மறுசீரமைப்பு நடவடிக்கைகளையும் அனைவருக்கும் இடையே சமனாகப் பகிர்ந்துகொள்வதன் மூலமே இந்த நெருக்கடியிலிருந்து முழுமையாக மீளமுடியும். குறிப்பாக நாட்டின் சகல பிரஜைகளும் தமக்குரிய வரியை சரியாகச் செலுத்துவதுடன், தாம் அறிந்த எவரேனும் வரி செலுத்தாதிருந்தால் அதுதொடர்பில்யானை தாக்கி மீன் வியாபாரி படுகாயம்

தகவல் வழங்கவேண்டும். நாம் கீழ்நோக்கி இலகுவாகப் பயணிக்கலாம். ஆனால் அதிலிருந்து மீண்டும் மேல்நோக்கிப் பயணிப்பதென்பது கடினமானதாகும். அதனைப் படிப்படியாகத்தான் செய்யமுடியும். இப்போது நாம் சரியான திசையில் பயணித்துக்கொண்டிருக்கின்றோம். இதில் சிறிய மாற்றங்களை மேற்கொள்ளலாம். ஆனால் பயணத்தின் திசையை மாற்றினால் மீண்டும் மிகமோசமான நெருக்கடிக்குள் விழுந்துவிடுவோம் என்பதை மனதிலிருத்திச் செயற்படவேண்டும் என்று வலியுறுத்தினார். (05)

# போதகர் ஜெரோமுக்கு நீதிமன்றத்தில் பிணை



போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்கி யுள்ளது.

இந்நிலையில், வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மே மாதம் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ பௌத்த மதத்திற்கு அவமரியாதையை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்ட நிலையில், நாட்டைவிட்டு வெளியேறியிருந்தார்.

இதன் பின்னர் நீதிமன்றத்தால் அவரை கைதுசெய்யுமாறு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில் இரண்டாவது நாளாக வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்காக சென்றிருந்தபோது அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே, புதன்கிழமை கோட்டை நீதிவான்நீதிமன்றம்பிணை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# முல்லைத்தீவில் டெங்கு சடுதியாக அதிகரிப்பு துப்புரவற்ற இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை





முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய்பரவலை தடுக்க துப்புரவற்ற இடங்களுக்கு சிவப்பு அறிவுறுத்தல் செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையினருடன் இணைந்து பிரதேசசபை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், சுகாதார பரிசோதகர்கள், இராணுவம், பொலிஸார் இணைந்து டெங்கு ஒழிப்புநடவடிக்கை தொடக்கம் மேற்கொண்டுவருகின்றார்கள். முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய் சடுதியாக அதிகரித்திருப்பதால் நீர் தேங்கி நுளம்பு குடம்பிகள் பரவக்கூடிய சிறிய பாத்திரங்கள் , பிளாஸ்டிக் பொருள்கள், ஏனைய நீர் தேங்கி நிற்கக்கூடிய பொருள்களை அகற்றுமாறும், டெங்கு அபாய நிலையை கருத்திற்கொண்டு சசுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள் மீறப்படும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## ‘இமயமலைப் பிரகடனம்’ அமரபுர நிகாய நிராகரிப்பு

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட உலகத் தமிழர் பேரவை மற்றும் அமரபுர நிக்காயவின் அனுநாயக்க தேரர் உள்ளிட்ட பௌத்த தேரர்கள் குழு தொகுத்த ’இமயமலைப் பிரகடனம்’ என்ற ஆவணம் இலங்கை அமரபுர மகா சங்க சபையின் கருத்து அல்லவென அந்த சங்க சபையின் உதவிப் பதிவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில், கடந்த வருடம் டிசெம்பர் 8ஆம் திகதி, உலகத் தமிழர் பேரவை மற்றும் பௌத்த பிக்குகளை சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அந்த பேரவை, சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அமரபுர நிகாயவின் அம்பகஹபிட்டிய பிரிவின் அனுநாயக்க மாதம்பாகம அஸ்ஸஜித்திஸ்ஸ தேரர் உள்ளிட்ட தேரர்கள் இணைந்து உருவாக்கிய, அச்சமோ சந்தேகமோ இன்றி, அனைவரும் பெருமையுடனும், நம்பிக்கையுடனும், சம உரிமையுடனும் அமைதியாக வாழக்கூடிய இலங்கையைப் பற்றிய ’இமயமலைப்பிரகடனத்திற்கு’ உற்சாக வரவேற்பு அளித்தார்.

மகாநாயக்க தேரர்கள் மற்றும் பொதுமக்களின் தகவலுக்காக எனக் குறிப்பிட்டு, டிசெம்பர் 30, 2023 அன்று, இலங்கை அமரபுர மகா சங்க சபையின் உதவிப் பதிவாளர் அம்பலன்கொட சுமேதானந்த தேரர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இமயமலைப் பிரகடனம் இலங்கை அமரபுர மகா சங்க சபையால் அங்கீகரிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

’இமயமலைப் பிரகடனம் தொடர்பாக இலங்கை அமரபுர மகா சங்கத்தில் எந்த உடன்பாடோ அல்லது விவாதமோ இடம்பெறவில்லை. அது ஒரு சில தேரர்களின் தனிப்பட்ட கருத்தின் வெளிப்பாடு மாத்திரமே என இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.’

2008இல் குறைந்தது 40,000 மரணங்கள் மற்றும் 20,000 நிராயுதபாணிகள் காணாமல் ஆக்கப்பட்ட, யுத்தத்திற்கு தலைமை தாங்கிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பு என்ற பெயரிலான அமைப்பின் தேரர்கள் மற்றும் உலகத் தமிழர் பேரவையை சந்தித்ததோடு, மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களும் இமயமலைபிரகடனத்தை ஏற்றுக்கொண்டிருந்தன.

’இமயமலை பிரகடனம்’ என்ற ஆவணம் ஏற்கனவே இலங்கைத் தமிழர்களாலும் பல புலம்பெயர் தமிழ் குழுக்களாலும் கடுமையாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

கூட்டு இமயமலைப்பிரகடனத்தை கையளித்த விடயத்தை ஜனாதிபதி ஊடகப் பிரிவு, ’இணக்கமான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இலங்கைக்கான உரையாடல் மற்றும் ஒத்துழைப்பை உருவாக்குவதில் ஒரு முக்கியமான முன்னேற்றம்.’ எனக் குறிப்பிட்டிருந்தது.

எவ்வாறாயினும், உலகத் தமிழர் பேரவை மற்றும் பௌத்த பிக்குகளால் முன்வைக்கப்பட்ட கூட்டு இமயமலைப் பிரகடனம் குறித்து தமக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை என புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளதாக, அமைச்சின் அதிகாரிகளை மேற்கோள் காட்டி, உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

கூட்டுப் பிரகடனத்தை கையளிப்பதற்காக, சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பைப் பிரதிநிதித்தவப்படுத்தி, அமரபுர நிகாயவின் அம்பகஹபிட்டிய பிரிவின் அனுநாயக்க வண. மாதம்பாகம அஸ்ஸஜிதிஸ்ஸ தேரர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நீதித்துறை சங்க நாயக்க வண. சியம்பலாகஸ்வெள விமலசார தேரர், மேல் மாகாணத்தின் பிரதான சங்க நாயக மற்றும் ஸ்ரீதர்மரக்ஷித பிரிவின் பதிவாளர் வண. கிதலகம ஹேமசார தேரர், வஜிரவங்ச பிரிவின் பதில் மகாநாயக்க பேராசிரியர் பல்லேகந்தே ரத்னசார தேரர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் மனித அபிவிருத்தி ஆய்வு மையத்தின் தலைவருமான வண, களுபஹன பியரதன தேரர், மத்திய மாகாணத்தின் பாததும்பர பிரதம சங்க நாயக வண. நாரம்பனாவே தம்மாலோக தேரர், ராமன்ய நிகாயவின் பிரதிப் பதிவாளர் வாந்துவே தம்மவங்ச தேரர்கள் ஆகியோர் பங்கேற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.(05)

## வவுனியா வைத்தியசாலையில் 39 டெங்கு நோயாளர்கள் சேர்ப்பு

வவுனியா பொது வைத்தியசாலையில் 39 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலைகாரணமாக டெங்கு தொற்று ஏற்பட்டுவருகின்றது. அதனடிப்படையில் வவுனியா வைத்தியசாலையில் 39 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும், குறித்த 39 பேரும் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கு சென்று வந்த நிலையிலேயே டெங்கு தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் டெங்கு தொற்றுத் தாக்கம் பெரியளவில் ஏற்படவில்லை.

எனினும், பொதுமக்கள் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அழித்து டெங்கு தொற்றில் இருந்து தம்மையும், சமூகத்தையும் காக்க முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் எனவும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர். (05)

## இத்தாலியிலிருந்து விமான தபால் சேவை மூலம் அனுப்பிய குஷ் போதைப்பொருளுடன் சிக்கியது

இத்தாலியிலிருந்து ஹோமாகமை பிரதேசத்திலுள்ள முகவரி ஒன்றிற்கு விமான தபால் சேவை மூலம் உணவுப் பொதிகளில் அனுப்பி வைக்கப்பட்ட 6 கோடியே 13 லட்சம் ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருள் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த பொதியானது சீதுவையில் உள்ள நிறுவனம் மூலம் விமான தபால் சேவை வழியாக செவ்வாய்க்கிழமை கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த பொதிகளை பெற்றுக்கொள்ள வந்த சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பொதியிலிருந்து 4 கிராம் 919 மில்லி கிராம் நிறையுடைய ஹேஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.



இதையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (05)

### இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஒரு படகைச் சேர்ந்த உரிமையாளர் உள்ளிட்ட 13 மீனவர்களுக்கு 10 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். டிசெம்பர் 28 அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனைய 12 மீனவர்களுக்கெதிரான வழக்கில், படகின் உரிமையாளரையும் குறித்த வழக்கின் முதலாவது சந்தேகநபராக இணைத்து, சந்தேகநபருக்கு அழைப்பாணை அனுப்புமாறு நீதிமன்றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்திற்கு விளக்கத்தை வழங்க வேண்டியிருப்பதன் காரணமாக அவர்களை ஜனவரி 3 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீரியல் வளத்துறை திணைக்களத்தினரால் மன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கமைய, குறித்த 12 இந்திய மீனவர்களும் நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

### ஜனவரி 9....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு), தேசிய நீரளவை சட்டமூலம் (இரண்டாவது மதிப்பீடு), கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டமூலத்தின் கீழ் 2355/30ஆம் இலக்க வர்த்தானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் 2334/55ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதி என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

அதன் பின்னர், இலங்கை பட்டய கப்பல் தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம், இலங்கைசித்த உளவியல்சார் உயர் கற்கைநெறிகள் திறந்த நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் என்பன இரண்டாவது மதிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளன. இதனைத் தொடர்ந்து பி.ப 05.00 மணி முதல் பி.ப 05.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை (ஆளும் கட்சி) மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

2024 ஜனவரி 10ஆம் திகதி புதன்கிழமை, மு.ப 09.30 மணி முதல் மு.ப 10.00 மணி வரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக (04 கேள்விகள்) நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 10.00 மணி முதல் 10.30 மணி வரையான நேரம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக (05 கேள்விகள்) ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் மு.ப 10.30 மணி முதல் பி.ப 05.00 மணிவரை நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு தொடர்பில் 2023 நவம்பர் 08ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தின் இரண்டாவது நாள் விவாதம் நடத்தப்படவுள்ளது.

அன்றையதினம், மத்தியஸ்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும் சட்டமூலம், அற்றோனித் தத்துவம் (திருத்தச்) சட்டமூலம், மத்தியஸ்தசபை (திருத்த) சட்டமூலம், மோசடிகளைத் தடுத்தல் (திருத்த) சட்டமூலம், நொத்தாரிசு (திருத்த) சட்டமூலம் ஆகியவை தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து அன்றையதினம் பி.ப 05.00 மணி முதல் பி.ப 05.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான இரண்டு கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2024 ஜனவரி 11 வியாழக்கிழமை மு.ப 09.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் நடத்தப்படவுள்ளது.

2024 ஜனவரி மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 09.30 மணி முதல் மு.ப 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை தனியார் உறுப்பினர் பிரேரணைகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதற்கமைய, வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல் (சமிந்த விஜேசிறி), நுண்நிதி நிறுவனங்கள் மற்றும் குத்தகை கடன் வழங்கும் நிறுவனங்களை கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு உட்படுத்துதல் (கோகிலா குணவர்தன), உள்நாட்டு அரிசி வகைகளின் போசாக்குக் குணம் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டல் (புத்திக பத்திறண), பெருந்தோட்ட தேயிலைக் கைத்தொழில் முறைமைக்குப் பதிலாக தேயிலை சிறுதோட்ட முறைமையொன்றினை ஏற்படுத்துதல் (வேலு குமார்) மற்றும் பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக பின்பற்ற வேண்டிய முறையியலை உள்ளடக்கிய சுற்றறிக்கையொன்றை வெளியிடல் (சட்டத்தரணி சாகர காரியவசம்) குறித்த தனியார் உறுப்பினர் பிரேரணைகள் விவாதிக்கப்படவுள்ளன.

இதன் பின்னர் பி.ப 05.00 மணி முதல் பி.ப 05.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான வினாக்கள் (இரண்டு வினாக்கள்) எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

# பாக். பாதுகாப்புச் செயலாளர் ஜனாதிபதி ரணிலுடன் சந்திப்பு



இலங்கைக்கு வருகை தந்திருக்கும் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லெப்டினன் ஜெனரல் (ஓய்வு) ஹமூத் உஸ் சமான் கான் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தார்.

பாதுகாப்பு தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற மூன்றாவது இலங்கை - பாகிஸ்தான் பாதுகாப்பு கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக அவர் இலங்கை வந்துள்ளார். பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை சிநேகபூர்வமாக வரவேற்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன உள்ளிட்டவர்களும் இதில் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

## சேவைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மின்சார சபை ஊழியர்களின் விடுமுறைகள் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளன.

மின்சார சபையின் பதில் பொதுமுகாமையாளர் வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்திற்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மின் விநியோகத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கான தேசிய கடமை தொடர்பில் கவனம் செலுத்தி இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குழந்தைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில்;, சிறுவர் தடுப்பூசித் திட்டம் முழுவதும் உலகலாவிய ரீதியில் பெரும் சரிவை சந்தித்தது, இதன் விளைவாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில்; உலகெங்கிலும் உள்ள 25 மில்லியன் இரண்டு வயது குழந்தைகள் எந்தவொரு சிறுவர் தடுப்பூசி டோஸையும் பெறவில்லை என்றும், மேலும் 15 மில்லியன் பேர் பகுதியளவில் தடுப்பூசயை பெற்றுள்ளனர்

இவர்கள் எதிர்காலத்தில் சின்னமுத்து போன்ற தொற்று நோய்களுக்கு உள்ளாகும் அபாயம் காணப்படுகிறது. சின்னமுத்து என்பது அதிக பரவும் விகிதத்தைக் கொண்ட தொற்று நோயாகும். ஒரு சின்னமுத்து நோயாளியினால் 16 பேருக்கு அந்நோய் பரவும் திறன் கொண்டுள்ளது

இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இந்தோனேசியா போன்ற நமது அண்டை நாடுகளில் சின்னமுத்து ஒரு பெரிய தொற்றுநோயாக பரவி வருவதாகவும், எமது நாட்டில், கொரோனா காலத்திலும், உகந்த அளவில் குழந்தைகளுக்குதடுப்பூசிதிட்டத்தை வழங்க முடிந்தது.

2023ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி, முதல் சின்னமுத்து நோயாளி இலங்கையில் பதிவாகியுள்ளதாகவும், ஆரம்ப கட்டங்களில் பதிவாகியுள்ள பெரும்பாலான சின்னமுத்து நோயாளிகள் சிறுவயது தடுப்பூசிகளை முறையாகப் பெறாதவர்கள்.

இதுவரை பதிவாகியுள்ள 740 சின்னமுத்து நோயாளர்களில் 49சதவீதம் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள பிரதம தொற்றுநோய் நிபுணர் சமித்த கினகே, இரண்டாவது அதிகூடிய நோயாளர்கள்கம்பஹாமாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

முதற்கட்டமாக, சின்னமுத்து நோய் பரவியுள்ள மற்றும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத இடங்களை கண்டறிந்த 9 மாவட்டங்கள் இந்த தடுப்பூசி வழங்க தெரிவு செய்யப்பட்டுள்ளன. இது 6 முதல் 9 மாதங்களுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மேலதிக டோஸாக வழங்கப்படும்; அந்த குழந்தைகள் உரிய வயதை எட்டியதும் உரிய அளவு டோஸை எடுக்க வேண்டும்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், குருநாகல் மற்றும் கல்முனை ஆகிய பிரதேசங்களை முதன்மையாகக் கொண்டு ஜனவரி 06 ஆம் திகதி ஒரு நாள் தடுப்பூசி திட்டம் ஆரம்பிக்கப்படும். அன்றைய தினம் இந்த மாவட்டங்களின் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இத்திட்டம் அமுல்படுத்தப்படும் என்றார்.

## அடுத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் சில இடங்களில் 50மி.மீக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத் தப்படுகின்றார்கள்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளவுபடுத்தியிருந்தார். அவரது தரப்புவாதத்தைக் கேட்ட நீதிமன்றம் போராட்டங்களுக்குத் தடை விதிக்க முடியாது என்று பொலஸாரின் கோரிக்கையை நிராகரித்தது.



# வரி அதிகரிப்பை வர்த்தகர்கள் தவறாக பயன்படுத்தக்கூடாது

## திறைசேரியின் செயலாளர் வேண்டுகோள்



இவ்வாண்டு முதல் அமுலுக்கு வந்திருக்கும் பெறுமதிசேர் வரி (வற்வரி) அறவீடானது வருமானத்தை அதிகரிப்பதையும், வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறையை ஓரளவுக்கு சாதகமான மட்டத்தில் பேணுவதையுமே நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

சில வர்த்தகர்கள் பெறுமதிசேர் வரி விதிக்கப்படாத பொருள்களின் விலைகளையும் அதிகரித்து இச்சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.

மக்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவ்வாறு செயற்படவேண்டாம் என்று வர்த்தகர்களிடம் கேட்டுக்கொள்வதாக நிதியமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்தார்.

இவ்வாண்டு முதல் அமுலுக்கு-வரும் பெறுமதிசேர் வரி (வற்வரி) விதிப்பு உள்ளடங்கலாக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மக்களின் அன்றாட வாழ்வில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

இந்நிலையில் இம்மறுசீரமைப்புக்கள் பற்றியும், நாடு என்ற ரீதியில் நாமபயணிக்கவேண்டிய பாதை குறித்தும் தெளிவுபடுத்தும்வகையில்ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த கலந்துரையாடலொன்றில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

கடந்த 2022 ஆம் ஆண்டு நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்ததுடன், அரச ஊழியர்களுக்கான சம்பளத்தைச் செலுத்துவதில்கூட நாம் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டோம்.

குறிப்பாக வருமானத்தை அதிகரிப்பது எப்படி? செலவுகளைக் குறைப்பது எப்படி? வரவு -செலவுத் திட்டப் பற்றாக்குறையை ஓரளவுக்கு சாதகமான மட்டத்தில் பேணுவது எப்படி? என்ற கேள்விகளே மிகமுக்கிய சவாலாக இருந்தது. அதனையடுத்து 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் வரி அறவீடுகளில் மறுசீரமைப்புக்களை மேற்கொண்டோம்.

அதேபோன்று அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி சகல அமைச்சுக்கள், திணைக்களங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பினோம். நாட்டில் வரிவருமானத்தை சேகரிக்கும் பிரதான கட்டமைப்புக்களான வருமான வரித்திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் என்பன வரி அறவீடுகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தன.

அதுமாத்திரமன்றி இவ்விடயத்தில் நாடாளுமன்ற மேற்பார்வைக்குழுக்களும் குறிப்பிடத்தக்களவிலான பங்களிப்பை வழங்கின.

நாட்டின் பொருளாதாரத்தைச் சீரமைப்பதற்கு நாம் இன்னும் நீண்டதூரம் பயணிக்கவேண்டியுள்ளது. ஆனால் அதனை முன்னிறுத்தி நாம் மிகவும் வலுவான அடித்தளத்தை இட்டிருப்பதாகக் கருதுகின்றோம்.

குறிப்பாகக் கடந்த காலங்களில் சமுர்த்திக் கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்டதைப் போன்ற 3 மடங்கு நிதி 2024 இல் அஸ்வெசும கொடுப்பனவுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

தற்போதைய சூழ்நிலையில் பொதுமக்கள் மிகுந்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள் என்பதை நாமறிவோம். எனவேதான் செலவினங்களைக் கட்டுப்படுத்தவேண்டிய தேவை அரசுக்கு இருப்பினும், இவ்வாறான சமூகப்பாதுகாப்புக் கொடுப்பனவுகளுக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2022 இலிருந்து 2023 இற்கு நகர்ந்ததை விட, 2023 இல் இலிருந்து 2024 இற்கு ஓரளவு சிறந்த நிலையிலேயே நகர்கின்றோம்.

இப்பொருளாதார நெருக்கடி தோற்றம் பெறுவதற்கு நாம் காரணமாக இல்லாத நிலையில், எதற்காக வரி செலுத்தவேண்டும் என எனது மகன் உள்ளிட்ட பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

இருப்பினும் தற்போது நாடு நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது. இதிலிருந்து நாட்டை மீட்பதற்கு நாமனைவரும் பங்களிப்புச் செய்யவேண்டியது அவசியமாகும்.

அது மிகக்கடினமானதாக இருந்தாலும், அதனைச் செய்தேயாகவேண்டும். அதேபோன்று தாம் செலுத்தும் வரிப்பணம் உரிய-வாறு செலவிடப்படுகின்றதா எனப் பொதுமக்கள்கேட்பதிலும்நியாயம்இருக்கின்றது. அந்நிதி முறையான விதத்தில் செலவிடப்படுவதை உறுதிசெய்யவேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது.

இவ்வாண்டு முதல் அமுலுக்கு வந்திருக்கும் பெறுமதிசேர் வரி (வற்வரி) அறவீடானது வருமானத்தை அதிகரிப்பதையும், வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறையை ஓரளவுக்கு சாதகமான மட்டத்தில் பேணுவதையுமே நோக்கமாகக் கொண்டிருக்கின்றது.

முன்னர்பெறுமதிசேர்வரிக்குள்உள்வாங்கப்பட்டிருக்காத பொருள்கள் இம்முறை அதில் உள்வாங்கப்பட்டிருப்பினும், இதுபற்றி நாம் மக்களுக்குத் தெளிவுபடுத்துவோம்.

அதேவேளை சில வர்த்தகர்கள் பெறுமதிசேர் வரி விதிக்கப்படாத பொருள்களின் விலைகளையும் அதிகரித்து இச்சூழ்நிலையை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.

மக்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவ்வாறு செயற்படவேண்டாம் என்று வர்த்தகர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெறுமதிசேர் வரி மூலமான வருமானத்தை 2.5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக உயர்த்துவதற்கு எதிர்பார்த்திருக் கின்றோம். வருமான வீழ்ச்சியே இப்பொருளாதார நெருக்கடிக்குவழிகோலியது என்பதைப்புரிந்துகொள்ளவேண்டும். எனவே மிக மோசமான நோய்க்கு முகங்கொடுத்திருந்த எமது நாட்டுக்கு இப்போது அவசியமான மறுசீரமைப்புக்கள் மூலம் சத்திரசிகிச்சை செய்திருக்கின்றோம்.

அதிலிருந்து நோயாளியால் (நாட்டினால்) உடனடியாக மீளமுடியாது. ஆனால் இதிலிருந்து மீளமுடியும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினால் அதனைச் சாதிக்கமுடியும். - என்றார். (05)

# மக்களின் நம்பிக்கையை வெற்றிகொள்வதாக ஜனாதிபதியின் வடக்கு விஜயம் அமையட்டும்

## சி.வி.விக்கினேஸ்வரன் வாழ்த்து



அரசியல்தீர்வு, நல்லிணக்கம் உள்ளிட்ட விடயங்களில் அர்த்தப்புஷ்டியான நகர்வுகளை முன்னெடுத்து இலங்கை வாழ் தமிழர்களின் நம்பிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வென்றெடுக்க வேண்டும் என வலியுறுத்திய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஷ்வரன், ஜனாதிபதியின் வாக்குறுதிகளும் வடக்குக்குக்கான உத்தேச விஜயமும் செயற்பாட்டளவில் அமையுமாயின் ஒத்துழைப்பை வழங்குவோம் என்றும் குறிப்பிட்டார்.

நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழ் வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ் தலைவர்கள் இணைந்து கூறினால் வேட்பாளராகக் களமிறங்குவது குறித்து பரசீலிப்பதாகவும் சி.வி.விக்கினேஷ்வரன் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று (வியாழக்கிழமை) வடக்கிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதோடு, அங்கு தமிழ் அரசியல் தலைவர்களை சந்திக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வழமையாக ஜனாதிபதி வடக்கிற்கு விஜயம் செய்யும் போது அவரைச் சந்தித்து தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவேன். ஆனால் இம்முறை சுகவீனம் காரணமாக ஜனாதிபதியைச்; சந்திப்பது தொடர்பாக இதுவரையில் தீர்மானிக்கவில்லை. நல்லிணக்கம் தொடர்பில் ஒவ்வொருவராலும் காலம் காலமாக பேசப்பட்டு வருகின்றதே தவிர, எவரும் அதனை நடைமு-றையில் செய்துமுடிக்கவில்லை. ஒரு தரப்பினர் ஒரு யோசனையை முன்வைக்கும் போது மறுபுறம் சிங்கள பெரும்பான்மை கட்சிகள் அதனை எதிர்க்கும் நிலைமையே காணப்படுகிறது.

எவ்வாறிருப்பினும் ஜனாதிபதி அதனை நடைமுறை சாத்தியமாக்கினால் அதை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அது எந்த முறையில் செய்யப்படும் என்பது குறித்து எதுவும் கூறப்படவில்லை. மார்ச்சில் இதற்கானதீர்வுவழங்கப்படும் என்றால், அதற்கு முன்னர் தேர்தலுக்கானஅறிவிப்புக்கள் வெளியாகக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. ஜனாதிபதியின் இவ்வாறான வாக்குறுதிகளை அரசியல் ரீதியான பேச்சாகவே நான் பார்க்கின்றேன். மாறாக உண்மையாகவே அவரால் அந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாயின் அதனை நாம் வரவேற்கின்றோம். அவற்றுக்கு இயன்றவரை முழுமையான ஒத்துழைப்புக்களையும் வழங்குவோம்.

வடக்கில் 3000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் விடுவிக்கப்படாமலுள்ளன. 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசாங்க காணிகள் படையினர் வசம் உள்ளன. அவற்றை மீளக்கையளிப்பதற்கு இதுவரைகாலமும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. கொழும்பிலுள்ளவர்களின் காணிகளை மீளக்கொடுத்து விட்டு அதனையும் காணி விடுவிப்பு எனத் தெரிவிக்கக் கூடும். எனவே பொதுவான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எதனையும் நம்பிவிட முடியாது.

இதுவரை காலமும் தேர்தல்களின் போது நாம் சிங்களப் பெரும்பான்மைக்; கட்சிகளை ஆதரித்து வருகின்றோம். ஆனால் அவர்கள் எமது பிரச்சினைகள் குறித்து அறிந்து கொள்வதாகத் தெரியவில்லை. எனவே தனிப்பட்ட ஒருவர் பொது வேட்பாளராகக் களமிறங்கி தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொண்டுவர முடியுமானால் அது சிறந்ததாகும். அந்த வகையில் கலாநிதி நாகேந்திரன் என்பவரிடம் இது தொடர்பில் நான் கலந்துரையாடிய போது, உடல்நலக் குறைவால் தன்னால் தேர்தலில் போட்டியிட முடியாது என அவர் குறிப்பிட்டார்.

அதன்பின்னர்நீங்கள்களமிறங்குவீர்களாஎன்று என்னிடம்பத்திரிகையாளர்கள்கேள்வியெழுப்பினர். தமிழ்க் கட்சிகளின் தலைவர் கள் இணைந்து இதற்கான அழைப்பை விடுத்தால் அது குறித்து பரிசீலிப்பதாகக் கூறினேன். இவ்வாறு நான் கூறிய விடயமே தற்போது திரிபுபடுத்தப்பட்ட செய்திகளாக பரவிக் கொண்டிருக்கின்றன. மாறாக நானாக முன்வந்து வேட்பாளராகக் களமிறங்குவதாகக் குறிப்பிடவில்லை. - என்றார். (05)

# தொடர் தற்கொலைகள் ஏழு மர்ம உயிரிழப்புகள்

## சிஐடியினர் விசாரணை

ஒரேமாதிரியான சூழ்நிலைகளில் சந்தேகத்திற்கு இடமான முறையில் இடம்பெற்ற மரணங்கள் குறித்த விசாரணைகளை சிஐடியினரிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களிற்கு முன்னர் நஞ்சூட்டப்பட்ட நிலையில் உயிரிழந்த ஆணினதும் பெண்ணினதும் உடல்களை பொலிஸார் மீட்டிருந்தனர்.

இவர்கள் இருவரும் ஒருமதப் பிரிவை சேர்ந்த போதகர் ஒருவரை பின்பற்றியவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது -இந்த போதகர் ஹோமகமவில் தற்கொலை செய்த நிலையில்சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

21 வயது யுவதியின் உடல் யக்கலவில் உள்ள அவரது வீட்டில் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பொலிஸார் அதேவேளை அம்பலாங்கொடையை சேர்ந்த 34 வயது நபர் அவர் தற்காலிகமாக தங்கியிருந்த மஹரமக விடுதியில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நாட்டின் பலபகுதிகளில் மதபோதனையில் ஈடுபட்ட ருவான் பிரசன்ன குணரட்ண தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

சிலநாள்களின் பின்;னர் இவரது மனைவி விசம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார். கஹன்தோட்டமாலபேயில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

தனது இரண்டு மகன்கள் மகளிற்கு நஞ்சூட்டிய பின்னர் இவர் தற்கொலை செய்துகொண்டார்;.

21 வயது யுவதியும் 34 வயது நபரும் இந்த மதபோதகரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஒரே வகையான விசத்தை அருந்தி உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (05)

# சுகவீனமுற்ற மகளுடன் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ள தாய் கைது

யுக்திய நடவடிக்கையின் போது சுகவீனமுற்ற மகளை மோட்டார் சைக்கிளில் அழைத்துச் சென்று போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட தாய் ஒருவர் இங்கிரிய பொலி-ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் இங்கிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய பெண்ணாவார். இவர் நம்பப்பன பிரதேசத்தில் தனது 11 வயது மகளுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது இங்கிரிய பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தனது உள்ளாடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2,250 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும் மோட்டார் சைக்கி ளில் இருந்து 8 கையடக்க் தொலைபேசிகளும் போதைப்பொருள் விற்பனையில் கிடைத்ததாகச் சந்தேகிக்கப்படும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும் பொலி-ஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த பெண் 37 வயது டைய நபரொருவரிடத்திலிருந்து ஹெரோயின் போதைப்பொருளை பெற்றுக் கொண்டுள்ளார் என விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேகநபர் 2,180 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருளுடன் பொலிஸ-ாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட தாயும் மகளும் ஹொரணை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என இங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
BOOK
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# இந்திய மீனவர் அத்துமீறல் மாத்திரம் வடக்குக் கடலில் பிரச்சினை இல்லை

## மீனவர் சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டு




வட பகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் ஒரே பிரச்சினை இந்திய மீனவர்களின் படையெடுப்பு எனக் காட்டுவதற்கு அப்பகுதிக்கு பொறுப்பான அதிகாரிகள் செயற்படுவதால் மீனவர்கள் மிகவும் கவலை அடைந்துள்ளனர் என வடபகுதி மீனவர் சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியபோது இவ்வாறு தெரிவித்த வடக்கின் ஒன்றிணைந்த மீனவர் சங்கத்தின் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் அரசியல் அதிகாரங்களின் பிரதிநிதிகளுக்கு மட்டுப் படுத்தப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த கடல் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைக்க வேண்டும். அதை விடுத்து, ஒரு கட்சியால் நியமிக்கப்பட்ட நியமன உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் அழைத்து மீனவர் பிரச்சினையை மழுங்கடித்து ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் இந்திய மீனவர் பிரச்சினை மாத்திரம்தான் வடக்கில் இருக்கிறது என்பது போல் காட்ட நினைப்பது வேதனையளிக்கிறது.

இந்திய மீனவர்கள் நாட்டுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவது மாத்திர மன்றி, உள்நாட்டு மீனவர்களைப் பாதிக்குமளவுக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

உள்ளூர் இழுவைமடி தடை செய்யப்பட வேண்டும். நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சுருக்கு வலை குறைந்திருந்தாலும் 2014 ஜனவரி மாதம் அது அதிகரிக்கும். அதற்கான வாய்ப்பு காணப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் 700 இற்கும் அதிகமான கடலட்டைப் பண்ணைகள் காணப்படுகின்றன. 150 இற்கும் மேற்பட்ட சட்டவிரோத பண்ணைகள் இருக்கின்றன. பருத்தித்தீவு பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத கடலட்டைப் பண்ணையை அகற்றுமாறு கோரி மாகாண ஆளுநர் அலுவலம், மாவட்ட செயலகம் வரை சென்று போராட்டம் நடத்தி, மகஜர் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே இவ்வாறான எங்களுடைய பிரச்சினைகளை பிரஸ்தாபிக்காமல், வெறுமனே இந்திய மீனவர்களால்தான் பாதிப்பு எனக் கூறுவதை ஏற்க முடியாது எனத் தெரிவித்தார். (05)

# யாழ். மாவட்டத்தில்; போதைப் பொருள் ஒழிப்பு பொலிஸாரின் செயற்பாட்டில் திருப்தி இல்லை

## அமைச்சர் டக்ளஸ் சாலகவிடம் தெரிவிப்பு



யாழ். மாவட்டத்தில் போதைபொருள் வியாபாரம் மற்றும் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்திற்கு திடமான தீர்மானத்தை மேற் கொள்ள வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவைபற்றிய நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி சாகல இரத்நாயக்க மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடையே இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மேற்குறித்த விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.


சூம் காணொளி ஊடாக புதன்கிழமை நடைபெற்ற இந்தக்கலந்துரையாடலில் -

போதைப் பொருள் பாவ னைக்கு எதிராக யாழ். மாவட் டத்தில் பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் அணுகுமுறைகளும் அதிருப்தியையும் சந்தேகங்களையும் ஏற்படுத்துகின்றன எனத் தெரிவித்துள்ள அமைச்சர், சில சந்தர்ப்பங்களில் போதைப் பொருள் வியாபாரிகள் தப்பித்துக் கொள்வதற்கான கால அவகாசத்தைப் பொலிஸார் வழங்கியதான சந்தேகம் மக்கள் மத்தியில் இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று, வற் அதிகரிப்பு உட்பட்ட பொருளாதார நெருக்கடிகள் எதிர்கொண்டுள்ள வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு, இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் செயற்பாடுகள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்து-வதால், அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் காத்திரமான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

கடற்றொழிலாளர் விவகாரத்தைத் தீர்ப்பதற்கு இரண்டு நாட்டு கடற்றொழிலாளர்கள் மற்றும் துறைசார்ந்தோரை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட இணைந்த செயற்குழுவின் சந்திப்பு மற்றும் இருநாட்டு அமைச்சர் மட்டத்திலான சந்திப்பு போன்ற-வற்றில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதேபோன்று, பனை தென்னை வள கூட்டுறவுச்சங்களின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கானகடன்வசதிகளைஏற்பாடு செய்துகொடுத்தல் மற்றும் வற் அதிகரிப்பு, எரிபொருள் விலையேற்றம் போன்றவற்றால் நாடளாவிய ரீதியில் பாதிப்பை எதிர்கொண்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)



# ரஷ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையில் புதிய விமான சேவை

ரஷ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையில் புதிய விமான சேவையை ரோசியாஏர்லைன்ஸ்ஜனவரிமுதலாம் திகதி அறிமுகப்படுத்தியது.

இந்நிலையில் ரஷ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நான்காவது விமான சேவையாக இந்த விமான சேவை திகழ்கிறது.

இந்த ரோசியா ஏயார்லைன்ஸ் விமான சேவை ரஷ்யாவின் மாஸ்கோவிற்கும் இலங்கையின் கட்டுநாயக்கவிற்கும் இடையே நேர அட்டவணை படி வாரத்தின் 4 நாள்கள் சேவையை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

ரஷ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையே அரோஃப்ளோட், அஸுர் ஏர், ரெட் விங்ஸ் மற்றும் ரோசியா ஏர்லைன்ஸ் ஆகிய விமான சேவைகள் இயங்கி வருகின்றன. (05)

# போதைப்பொருளுடன் காதல் ஜோடி கைது

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்த சந்தேகத்தின் அடிப்படையில் காதல் ஜோடி ஒன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளதாக சிதம்பரபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சிதம்பரபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சோதனை இட்டபோது அங்கு தங்கி இருந்த காதல் ஜோடியிடம் கஞ்சா மற்றும் தொலைபேசியினுள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் ஐஸ் போதைப் பொருளும் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், நேற்று (புதன் கிழமை) நீதிமன்றத்தில் காதலர்கள் இருவரும் ஆஜர்ப்படுத்தப்பட்டதுடன் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கும் பொலிஸார் நீதிமன்றத்தின் அனுமதி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

குறித்து நடவடிக்கை வவுனியா உதவி பொலிஸ் அத்தியட்சகர் நாலக அசோக்குமாரவின் வழிநடத்தலில் சிதம்பரபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர். நிரோசன் தலைமையில் இ.மதன்ராஜ், செ.வன்னிநாயக, சேனாதீர, மதுசங்க, ரஞ்சுலா சுபத்திரா ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. (05)

# சமூக ஊடகங்கள் மூலமாக மாணவர்களுக்கு போதைப்பொருள் விநியோகம்; பெண் கைது

பேஸ்புக், வட்ஸ்அப் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு போதைப்பொருளை விநியோகிக்கும் சந்தேக நபருடன் தொடர்புடைய இளம்பெண் போதைப்பொருள் பொதி செய்யும் சாதனங்களுடன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், சாய்ந்தமருது பொலிஸார் தொடர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பு புறநகர் பகுதியை சேர்ந்த 26 வயதுடைய பெண் ஒருவரே கடந்த வியாழக்கிழமை அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸாரால் கைது செய்-யப்பட்டிருந்தார்.

அதனையடுத்து, அவர் 7 நாள்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

குறித்தபெண்ணின்கணவரும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் போதைப்பொருள் கடத்திய சம்பவத்தில் சிறைத்தண்டனையை அனுபவித்து வருவதுடன், இப்பெண் மற்றுமொரு ஆணுடன் தொடர்புவைத்துக்கொண்டு, இந்த போதைப்பொருள் வலையமைப்பினை நடாத்தி வருகிறார்.

இந்த பெண்ணின் போதைப் பொருள் வலைப் பின்னலானது பாடசாலை மாணவர்களை அடிப்படையாக கொண்டு சமூக வலைத்தளங் களான பேஸ்புக், வட்ஸ்அப் ஊடாக இடங்களை குறிப்பிட்டு, ஐஸ் மற்றும் இதர போதைப்பொருள்களை விநியோகித்து வந்துள்ளார் என ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

விசேட போதைப்பொருள் ஒழிப்புக் குழுவொன்றை அமைத்து அக்குழுவின் ஊடாக பொதுமக்களுக்கு விழிப்பூட்டல்களை வழங்கவும் போதைப்பொருளுடன் தொடர்புடைய நபர்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்கவும் பொதுமக்கள் ஒத்துழைப்புகளை வழங்க முன்வரவேண்டும் என அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என். ஜயபத்ம அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மனைவியின் மூத்த சகோதரனை கோடரியால் தாக்கிக் கொலை செய்தவர் பொலிஸில் சரண்

மனைவியின் மூத்த சகோதரனின் தலையில் கோடரியால் தாக்கி கொலை செய்துவிட்டு கொலைக்குப் பயன்படுத்திய கோடரியுடன் சந்தேக நபர் பொலிஸில் சரணடைந்துள்ளார் என ஹித்தோகம பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு பொலிஸில் சரணடைந்தவர் ஹித்தோகம பிரதேசத்தை சேர்ந்த 49 வயதுடையவராவார். இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர் அதே பிரதேசத்தை சேர்ந்த 63 வயதுடையவராவார்.

இவர்கள் இருவரும் ஒரே வீட்டில் வசித்து வந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் உயிரிழந்தவரது சகோதரியின் கணவரான நிலையில் அவரது மனைவி மத்திய கிழக்கு பகுதியில் பணிபுரிந்து வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் சந்தேக நபரை வீட்டை விட்டு வெளியேறுமாறு கூறியதையடுத்து இருவருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் சந்தேக நபர் உயிரிழந்தவரது தலையில் கோடரியால் தாக்கியுள்ளார்.

காயமடைந்தவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹித்தோகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தடை செய்யப்பட்ட பொலித்தீன் உற்பத்தி ; 180 நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை

கடந்த ஆண்டு தடை செய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருள்களை உற்பத்தி செய்த 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதில், 180 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதார அதிகார சபையின் கழிவு முகாமைத்துவ பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் அஜித் வீரசுந்தர தெரிவித்துள்ளார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.01.2024இல் வெளியிடப்பெற்றது.